

பாரதியார் பிறந்த நாளான 11-12-’82 தேசிய ஒருமைப்பாடு நாளாகக் கொண்டாடப் பெற்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் காமராசர் சாலையில் உள்ள பாரதியார் சிலை அருகில், நாட்டுக் கொடி ஏற்றி, ஒருமைப்பாடு உறுதி மொழி செய்து வைத்தார்.

# தேசிய
# ஒருமைப்பாடு உறுதிமொழி

நாட்டின் சுதந்திரத்தையும், ஒருமைப்பாட்டையும் காத்து வலுப்படுத்த முழுமனதான ஈடுபாட்டுடன் பாடுபடுவேன் என்று நான் காணிக்கை உணர்வுடன் உறுதி கூறுகிறேன்.

நான் ஒருபோதும் வன்முறையில் ஈடுபட மாட்டேன் என்றும், சமயம், மொழி, வட்டார, மற்ற அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளைப் பொறுத்த வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் அமைதியான முறையில் சட்டநெறி சார்ந்த வழிகளில் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.


திருவள்ளுவர் ஆண்டு 2013
துந்துபி - மார்கழி 17
மலர் : 13 இதழ்: 13
1-1-1983

தமிழரசு

# தாயகத்திற்குச் சிறப்புச் சேர்ப்பீர்!

# சமுதாயத்திற்கு உயர்வு தருவீர்!

மேதகு பல்கலைக் கழகவேந்தர் அவர்களே, இணை வேந்தர் அவர்களே, துணை வேந்தர் அவர்களே, பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பேராசிரியர்களே, பட்டம் பெறுவதற்காக இங்கே வந்து இந்த அவையினை அணி செய்கின்ற என் அன்பிற்குரிய மாணவச் செல்வங்களே !

இன்றைய தலைமுறையினரான இளைஞர்களைச் சந்திப்பது எனக்கு எப்போதுமே ஒரு மகிழ்ச்சி தருகின்ற அனுபவம். அதுவும் பல்கலைக் கழகத்தில் பயின்று பட்டம் பெற்று இந்தச் சமுதாயத்தின் எதிர்காலத்தை உருவாக்குகின்ற மகத்தான பொறுப்பினை ஏற்பதற்கு முதற் படியில் அடி எடுத்து வைக்கின்ற உங்களை இன்று சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நான் கல்வி நிலையங்களில் அதிகம் படிக்காதவன் ; படிக்க வேண்டுமென்ற ஆர்வம் இருந்த நாட்களில் உழைத்து வாழ வேண்டுமென்ற கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டதினால் படிக்கும் வாய்ப்பை இளமையிலேயே இழந்தவன். பல்கலைக் கழகங்களிலே திறமையாகக் கல்வி பயின்று பட்டம் பெற்று வெளி வருகின்ற உங்களையெல்லாம் இன்று காணும் பொழுது, ஒரு குடும்பத்தில் கல்வி பயின்று பட்டம் பெறாத ஒரு குடும்பத்தலைவன் தனது குடும்பக் குழந்தைகள் பட்டம் பெற்று வெளி வருகையில் எவ்வாறு பெருமிதம் கொள்வானோ அந்தப் பெருமையை, பெருமிதத்தை நான் இன்று அடைகிறேன்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த மதுரை மாநகரில், ஏழைகளெல்லாம் இலவச பள்ளிக் கல்விபெற வேண்டுமென்று பாடு பட்டவரும், விடுதலை வீரரும், தன்னலமற்ற தியாகியும், ஏழைகளின் தோழருமான பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயரால் இந்தப் பல்கலைக் கழகம் இயங்க வேண்டுமென எண்ணினேன். அந்த எண்ணத்தைத் தமிழக மக்கள் பேரன்போடு போற்றினார்கள். கல்லூரியில் பட்டம் பெறாத ஒருவரின் பெயராலே ஒரு பல்கலைக் கழகம் இயங்குவது இந்தக் காலத்தில் தமிழ்க்திற்குப் பெருமை சேர்க்கும் சிறப்பாகும்.

இந்தச் சிறப்பை மேலும் எடுத்துக் காட்டுகிற வகையில் தான், ஒரு கல்லூரிப் பட்டத்தைப் பெறாத, பெறுவதற்கான வாய்ப்பை இழந்து விட்ட என்னை, பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்த அழைத்திருக்கிறார்கள் என்று கருது கிறேன்.

அறிவு வளர்ச்சி அல்லது ஆராய்ச்சி அறிவு என்பது கல்லூரிகளில் பெறுகிற பட்டங்களினால் மட்டும் கிடைத்து விடுவதில்லை என்பதை இன்றைய





# பெற்றோருக்குப் பெருமை தேடுவீர்!

# வருங்காலத்தை ஒளிமயம் ஆக்குவீர்!

இளைஞர் உலகத்திற்கு, மாணவ சமுதாயத்திற்கு, இந்தப் பல்கலைக் கழகத்தின் வேந்தரும் துணை வேந்தரும் இந்த வாய்ப்பை என் போன்றவர்கட்கு அளிப்பதன் மூலம் உணர்த்த விரும்புகிறார்கள் என்றே நான் இதைக் கருதுகிறேன்.

இதே பல்கலைக் கழகத்தில் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் முதல் பட்டமளிப்பு விழாவில் சொற்பொழிவு ஆற்றியதை இன்று நாம் நினைவு கூர்வது நமது நீங்காத கடமையாகும். பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழக வரலாற்றில் ஒரு சகாப்தம். தந்தை பெரியாரின் பாசறையில் பயின்று தனக்கென தனித்தன்மையான கொள்கைகளை வகுத்துக்கொண்டு, அவற்றிற்கு உதாரணமாக வாழ்ந்து, சமுதாயப் புரட்சிக்கு வழி காட்டிய மாபெரும் சிந்தனையாளர். 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு', 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்', 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு', 'மறப்போம் மன்னிப்போம்', 'வசவாளர்கள் வாழ்க', 'எங்கிருந்தாலும் வாழ்க' என்ற சொற்றொடர்கள் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களால் வெறும் வார்த்தை அலங்காரங்களுக்காகச் சொல்லப்பட்டவை அல்ல. அவை அவர் கடைப்பிடித்த வாழ்க்கை நெறிகள்; மற்றவர்கட்கு அவர் காட்டிய வாழ்க்கைத் தத்துவங்கள். அதனால்தான் அவர் ஒரு ஈடு இணையற்ற அன்புடையவராக, பேரிதயம் படைத்த ஒரு மாமனிதராக இன்றும் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அத்தகைய மேதை, கல்வியைப் பற்றியும், மாணவர்களுடைய கடமை, ஒழுக்கம் ஆகியவை பற்றியும் இந்த மன்றத்திலேயும் வேறு பல இடங்களிலும் வாழ்நாள் முழுவதும் எடுத்துக் கூறியவை என்றென்றும் நமது நினைவில் இருத்திக் கடைப்பிடிக்க வேண்டியவையாகும்.

## மாண்புமிகு முதல்வர்

அவரது கொள்கைகளைப் பின்பற்றி, அவரை வழிகாட்டியாகக் கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றும் நான் அவர் சொன்னதற்கு மேலாக புதிதாகச் சொல்வதற்கு ஒன்றுமில்லை; என்றாலும் சமுதாயத்தின் இன்றைய நிலையையொட்டி ஒரு சில கருத்துக்களை உங்கள் முன் எடுத்துரைப்பதை என் கடமையாகக் கருதுகிறேன்.

தொன்மையான பெருமை பெற்றது நம் இந்தியத் திருநாடு. குறிப்பாக நமது தமிழ் நாட்டிற்குப் பல ஆயிரம் ஆண்டுகளாகத் தழைத்து





மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாவில் (7. 9. 1967)
பேரறிஞர் அண்ணா உரை ஆற்றுகிறார்.

வளர்ந்து வரும் வரலாற்றுப் பெருமை உண்டு. என்றாலும், எவ்வளவு தொன்மையான சிறப்பைப் பெற்றிருந்தாலும் மாற்றங்கள் சமுதாயத்தில் இன்றியமையாதவை. 'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே' என்பது நமது தமிழ் இலக்கணம். அதே நேரத்தில் எந்த மரபுகளையும் பண்பாடுகளையும் நல்லவையென்று காலங்காலமாகப் போற்றி வந்தோமோ, அவைகளை உதறிவிட்டு, புதுமை என்ற பெயரில் போலித்தனத்தை நாடி அலைவதும் நமக்கு உகந்ததல்ல. ஆனால் அதே சமயத்தில் பழமையிலேயே சிறைப் பட்டுப் புதிய சூழ்நிலைகளை உணர மறுத்தால் தேக்கம் தான் மிஞ்சி நிற்கும். இந்த இரண்டு நிலைகளிலும் சிக்குறாமல், பழைமையை ஆதாரமாகக் கொண்டு, புதுமையிலே ஆர்வம் காட்டி, நமது பழைய மரபுகள், பண்பாட்டு நெறிகள் இழையோடுகின்ற சமூகப் பொருளாதார அமைப்புதான் நமது நாட்டுக்கு ஏற்றதாகும். மாறுதலைக் கண்டு அஞ்சாமல் அறிவுடமையோடும் ஆண்மையோடும் நின்று எதையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து காலத்திற்கும் அவசியத்திற்கும் தக்க வண்ணம், தன்னைத் தயாரித்துக்கொள்ள வேண்டியது பகுத்தறிவுடைய மனிதனின் இன்றியமையாத கடமையாகும் :

இன்று நாகரிகத்தின் வளர்ச்சி, மிக உச்ச நிலைக்கு எட்டியுள்ள போதிலும் வசதியுள்ள மனிதனுக்குப் பல வாய்ப்புகளும், சாதனங்களும், கிட்டியுள்ளபோதிலும், பெரும்பாலான மனிதர்கள் தங்கள் மன அமைதியைப் பறிகொடுத்துள்ளார்கள். இதற்குக் காரணம் தான் வாழும் சமுதாயத்திற்கு, தான் சொந்தமானவன் (sense of belonging) என்ற உணர்வு இல்லாமல் போனதுதான். தான் உயரவேண்டும்—இல்லை தான் மட்டும் உயர வேண்டும் என்ற வேட்கை உணர்வையும், போட்டி உணர்வையும் நாகரிகச் சமுதாயம் வளர்த்துள்ளதேயொழிய, தான் ஒரு சமூகத்தைச் சார்ந்தவன், அந்தச் சமூகத்திற்குச் சொந்தமானவன் என்ற ஒட்டுறவை இன்றைய நாகரிகச் சமுதாயம் வளர்த்துக் கொள்ளவில்லை. அதற்குக் காரணம் நாகரிகமுள்ள சமுதாயமாக வளர வேண்டுமென்று விரும்புகிறோமே தவிர, அறிவார்ந்த, அன்பார்ந்த சமுதாயமாக நம்மை வளர்த்துக் கொள்ள நாம் முனைவதில்லை.

கல்வி அல்லது பட்டப்படிப்பு மட்டுமே ஒருவனை முழுமை பெறச் செய்துவிடாது. மனிதனுடைய அறிவாற்றலையும், திறமைகளையும் வளர்த்து அவனுக்கும் அவன் வாழும் சமுதாயத்திற்கும் பயன்படுமாறு செய்யும் கருவியே கல்வி. மனிதன் என்று ஒருவன் தன்னைச் சொல்லிக் கொள்ள வேண்டுமானால் அவன் கல்வி அறிவைப் பெற்றாக வேண்டும். மக்களாட்சி தத்துவத்தில் எல்லோரும் சமம் என்ற நிலை உருவாவதற்கு ஒவ்வொருவரும் கல்வி கற்கும் வசதியைப் பெறுவது அவசியம். கல்வி வசதியை எல்லோரும் பெறுகின்ற நிலை இல்லையெனில் ஒரு சமத்துவ, சமுதாய அமைப்பு ஏற்பட முடியாது. பள்ளிக்கூடங்களையும் பல்கலைக் கழகங்களையும் அதிக அளவில் ஏற்படுத்தினால் மட்டும் நாம் கல்வியை வளம்பெறச் செய்துவிட்டோமென்று கூறமுடியாது. எல்லோருக்கும் கல்வி கற்க வாய்ப்பு இருந்தால் தான் ஒரு சமத்துவ சமுதாயம் அமைவது சாத்தியம். பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் விளைவாக கல்வி கற்க வேண்டிய இளம் பருவத்தில் வேலைசெய்து பிழைக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்படும் நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வாய்ப்பினை இழக்க நேர்ந்தால், அது சமுதாயத்திற்குப் பெரிய இழப்பாகும். எல்லோரும் கல்வி கற்கும் வாய்ப்பினைப்பெற வேண்டுமென்றும், அதற்கு பொருளாதார காரணங்கள் முட்டுக்கட்டையாகி விடக் கூடாதென்ற கருத்தின் அடிப்படையில்தான், குழந்தைகளின் மதிய உணவுத் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தி, தினமும் சுமார் 65 லட்சம் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு வழங்கு

கிறது. இதனால் அவர்களது குடும்பத்தின் பொருளாதார சூழ்நிலைகள் அவர்களது கல்வியைப் பாதிக்காது என்பது உறுதி செய்யப்படுகிறது. இது எதிர்கால சமுதாயத்தின் நன்மைக்காக நாம் செய்யும் முதலீடு.

கல்வி என்பது ஏட்டுப் படிப்பிலும், எண் எழுத்துப் பயிற்சியிலும் மட்டும் அடங்கியது அல்ல. ஆழ்ந்த அறிவும், சிறந்த அனுபவமும், பண்பட்ட குணமும் சமூக உணர்வும் கொண்ட நோக்கும், நெறிமிக்க நடத்தையும்தான் மாணவர்களை நாட்டின் சிறந்த குடிமக்களாக ஆக்கும். பல்கலைக்கழகப் பரிட்சையிலே வெற்றி கண்டு, பட்டம் பெற்று இன்று வெளியே செல்லத் தொடங்குகிறீர்கள். இனி, வெளியே உங்களுக்குக் காத்திருப்பது வாழ்க்கைப் பரிட்சை. அந்தப் பரிட்சையிலேயும் நீங்கள் வெற்றி கண்டு இந்த நாட்டின் நல்ல குடிமகன் என்ற பட்டத்தையும் நீங்கள் பெறவேண்டுமென்று உங்களை நான் உளமார வாழ்த்துகிறேன்.

'இந்தியா கிராமத்திலே வாழ்கிறது' என்ற உண்மையை இந்திய நாட்டின் தந்தை அண்ணல் காந்தி அடிகள் நமக்கு உணர்த்தினார். நாம் கற்கின்ற நுட்ப அறிவும், கிராம மக்களின் அனுபவ அறிவும் ஒன்றாக இணைந்தால்தான் சமுதாயம் முன்னேற முடியும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த நோக்கிலே நீங்கள் இன்று பல்கலைக்கழகத்தின் தூதுவர்களாகப் பாமரர்களிடம் செல்ல வேண்டும். வாழ்வையே அடகு வைத்து, தங்கள் உடலையே உரமாக இட்டு உழைத்து வரும் இப்பாமர மக்கள், தங்கள் வாழ்நாள் முழுவதும் சேகரித்துள்ள அனுபவ அறிவு, ஒருசில புத்தகங்களை மட்டும் படித்துப் பெறக்கூடிய ஏட்டு அறிவைவிட, மிக உயர்ந்ததும், உண்மையானதும், நிலையானதுமாகும். அவர்கள் அனுபவ அறிவையும், நம் ஆராய்ச்சி அறிவையும் ஒன்றாகப் பிணைக்க வல்ல, புதிய உத்திகளைக் கண்டுபிடிப்பதுதான், பல்கலைக்கழகத்தின் முன் இன்றுள்ள பெரும் பொறுப்பாகும்.

கல்விச் சாலையில் உள்ள ஆய்வுக் கூடங்களில் உங்களில் பலர் பரிசோதனைகள் நடத்தி உள்ளீர்கள். ஆனால், சமுதாயம் என்ற பரந்த ஆய்வுக்கூடத்தில் பரிசோதனை நடத்த இனி உங்கள் இளம் உள்ளங்களை நீங்கள் பக்குவப் படுத்த வேண்டும்.

அண்ணா வேடிக்கையாகச் சொன்னார்கள்— "மேல்நாடுகளில் நூற்றுக்கு தொண்ணூறு பேர் படித்தவர்களாக இருக்கிறார்கள். நம் நாட்டில் நூற்றுக்கு அறுபது பேர் எழுத்தறிவு அற்றவர்களாக இருக்கிறார்கள். ஆனால், நூற்றுக்கு எண்பது பேர் அறிவுள்ளோர் வாழும் நாட்டின் மக்கள் நம் நாட்டவரை மதிக்கவேண்டுமென்று நாம் எண்ணுவதற்கு நாம் மெத்த துணிச்சல்காரர்களாகத்தான் இருக்கவேண்டும்" என்று சொன்னார்கள். இன்று மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 46 பேர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இன்னும் அண்ணா கூறிய துணிச்சலுக்கு உண்மையிலேயே பொருத்தமுள்ளவர்களாக நம்மை நாம் தயார் செய்து கொள்ளவில்லையென்றே கூற வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த சதவிகிதம் 100க்கு 60 பேர் என்றோ அல்லது 70 பேர் என்றோ இந்த 15 ஆண்டு காலத்தில் உயர்ந்திருந்தால் நாம் அவ்வாறு கூறியிருக்கமுடியும். இதற்கு என்ன காரணம்? கல்விக்கூடங்கள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் எண்ணிக்கையில் பெருகியிருக்கின்றன. ஆயினும் நமது முன்னேற்றத்தில் வேகம் இல்லாததற்குக் காரணம் என்ன என்பதை நாம் சிந்திக்கவேண்டும். ஆண்டுதோறும் நாம் கல்விக்காகச் செலவிடும் தொகை அதிகரித்துக் கொண்டே



போகிறது. ஆனால் அதற்கேற்ப நாம் முன்னேற்றம் பெற்றுள்ளோமா என்றால் இல்லை. நமது கல்விச் சாலைகளின் பணி இந்தியாவின் இதயம் போன்ற கிராமங்களை எட்டவில்லையென்பதே காரணம். எனவே, நமது கல்வித் திட்டத்தில், படிப்பு முறையில், அடிப்படையான மாற்றங்கள் தேவையென்று நான் கருதுகிறேன். இந்தியாவின் மக்கள் தொகையில் மூன்றில் இரு பங்கினர் கிராமப்புறங்களில்வாழ்கின்றனர். கிராமங்களிலுள்ள கல்வியறிவில்லாத பெரியோர்கள், தாய்மார்கள் ஆகியோர்களுக்கு அடிப்படையான கல்வியையூட்டுகின்ற வழிமுறைகளை நாம் கண்டறிந்தாகவேண்டும். பள்ளி சென்றுதான் படிக்கவேண்டும் என்ற நிலைமையை நாம் படிப்படியாக மாற்றியாக வேண்டும். உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி, சமுதாயக் கல்வி, பொருளாதாரக் கல்வி, அறிவியல் கல்வி இப்படிப்பட்ட அனுபவங்களுடன் இணைந்த கல்வியே கற்றுத்தரப்




படவேண்டும், அடிப்படை ஆதாரக்கல்வியை ஒருவர் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலிருந்தோ அல்லது மாலைக்கல்வி மூலமோ கற்க வசதிசெய்து தரப்படவேண்டும். இந்த வசதி ஏற்பட்டால் தங்கள் தொழில்களைச் செய்து கொண்டே பொதுக் கல்வியறிவைப் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். பட்டம் பெற்று வெளிவரும் மாணவர்களாகிய நீங்கள் பல்வேறு தொழில்களில் நிபுணர்களாக உங்கள் வாழ்க்கையினை அமைத்துக் கொண்டு வாழ்கின்றபோது வயதுவந்தோருக்கும், பெண்களுக்கும் வாய்ப்புக் கிடைக்கும் வகையில் நீங்கள் அவர்களுக்குக் கல்வி கற்றுத்தருவதற்கு உங்கள் ஓய்வு நேரத்தை அல்லது மாலை நேரத்தை ஒதுக்கலாம். இதன் மூலம் நீங்கள் நாட்டுக்கு ஒரு அரிய தொண்டைச் செய்த பெருமைக்கு உரியவர்களாவீர்கள். எனவே, கல்வியைப் பரவலாக்குவதற்கு இதுவொரு நடைமுறை யோசனை என்று நான் கருதுகிறேன்.

அறிவியல், தொழில்நுட்பவியல், கணிதம், வேளாண்மை ஆகிய பல்வேறு துறைகளில் உலகின் பல்வேறு பகுதிகள் அடைந்துள்ள முன்னேற்றங்கள் யாவும் சாதாரண குடிமகன் அறியும் வகையில் செய்யப்படவேண்டும். இவைகள் அனைத்தையும் தமிழில் கற்பதற்கு வசதி செய்யப்படவேண்டும். அறிவியல், தொழில் நுட்பவியல் போன்ற கல்விகளையெல்லாம் தமிழில் கற்பதற்காக அந்த அடிப்படை இயல்களை விளக்க, தமிழில் நிறையப்புத்தகங்கள் வேண்டும். அவைகள் மாணவர்கள் சுலபமாகக் கற்கும் வகையில் தமிழில் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்றெல்லாம் மகாகவி பாரதியார் கூறியுள்ளார். ஜப்பான் நாடு, இன்று அமெரிக்கா போன்ற மிகவும் முன்னேற்றமடைந்த நாடுகளுக்குப் போட்டியாக பல்வேறு துறைகளில் முன்னேறியுள்ளதற்குக் காரணம் அங்கு விஞ்ஞானம் நுட்பவியல் உட்பட எல்லாப் பாடங்களும் அந்த நாட்டு மொழியிலேயே கற்பிக்கப்படுவதுதான். சாதாரண குடிமகனும் கல்வியின் பயனை எளிதில் பெற்று மேலும் மேலும் முன்னேறுவதற்கும், அவர்களது ஆர்வத்தை, அறிவாற்றலை வளர்த்துக்கொள்வதற்கும் அங்கு முடிகிறது. இந்த முறையை நாம் கையாண்டு அறிவுத் துறையிலே நாம் ஒரு பெரும் புரட்சியைச் செய்யலாமென்று தோன்றுகிறது.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்"

என்று பாரதியார் பாடியுள்ளதை அவருடைய நூற்றாண்டு விழாக்காலத்திலாவது நாம் நினைவில் கொண்டு முயற்சிக்கவேண்டும்.

கல்வி கற்பது, பட்டப்படிப்பு படிப்பது என்பது படித்து முடித்தவுடன் ஏதாவது ஒரு வேலை பார்ப்பதற்குத்தான் என்ற ஒரு தவறான அடிப்படையில் நீண்டகாலமாக நம்முடைய இளைஞர்களை உருவாக்கி வந்துவிட்டோம். ஏதாவது ஒரு வேலை பார்ப்பதற்குத்தான் கல்வி பட்டம் என்றால், நாட்டில் உள்ள அனைவரும் கல்விகற்க வேண்டிய [illegible]

ஆங்கிலேயர் காலத்திலே அவர்களுக்குத் தேவையான, நிர்வாகத்திற்குத் தேவையான வர்கள் மட்டுமே கல்விகற்கும் வாய்ப்பைப் பெற்றார்களே அந்த அடிப்படைதான் சரியெனத் தோன்றும். ''வேலைபார்க்கத்தான் படிப்பு'' என்ற பழைய கல்வித் திட்டத்திலேயே நாம் சென்றுகொண்டிருப்பதும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவருவதற்கு ஒரு காரணம் எனலாம். தற்போதுள்ள கல்விமுறைக்குப் பதிலாக தொழிற்கல்விமுறை பெருக வேண்டும். கல்வி அறிவு என்பது மனிதனுக்கு அடிப்படை, தொழிற்கல்வி என்பது வாழ்க்கைக்கு அடிப்படை என்ற உணர்வைக்கல்வி நிலையங்கள் வளர்த்தாக வேண்டும். எனவே, கல்வி குறித்து நமது கருத்துக்களில் புரட்சிகரமான மாறுதல் தேவை என்பதையும், அதைப் பற்றிச் சிந்திக்கவேண்டிய கட்டாயத்திற்குள்ளாகி உள்ளோம் என்பதையும் நான் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். படித்த அமைக்க வேண்டும் படித்த வாலிபர்கள். இதற்கான திறமும், திரமும் தேவை'' என்று அண்ணா அவர்கள் கூறியதை நாம் இங்கு நினைவு படுத்திக் கொள்வது பொருத்தமுடையது.

நீங்கள் பட்டதாரிகளாக, சமுதாயத்தில் அடியெடுத்து வைக்கும்பொழுது சில பிரச்சினைகள் உங்களைச் சந்திக்கின்றன. சாதி, சமயப் பூசல்கள் அவற்றுள் முக்கியமானது. கல்லூரிகளில் சாதி, சமய வேறுபாடின்றி வாழ்ந்து வந்த நீங்கள் சமுதாயத்திலே அவைகளைச் சந்திக்கும் நிலையுள்ளது. விடுதலை பெற்று 35 ஆண்டுகள் ஆகியும் நமது நாடு உலக நாடுகளிடையே பின்னடைந்த நிலையில்தான் இன்னும் இருக்கின்றது. இதனை நாம் மாற்றியமைத்தே ஆகவேண்டும் என்று உறுதியுடன் உங்கள் செயல் முறைகளை வகுத்துக்கொள்ளுங்கள். ஆண்டு ஆண்டுகாலமாக நம்மைப் பிடித்து வந்துள்ள சாதி, சமய வேறு



இளைஞர்கள் நம்பிக்கையுடன், கிராமங்களுக்குச் சென்று அல்லது தாங்கள் வாழுகிற இடங்களில், கல்வியைப் பரப்பவோ, தொழிலைத் துவங்கவோ அல்லது வியாபாரம் செய்யவோ முனையலாம். அதற்கு அரசும் துணை புரியப் பல்வேறு திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்துகிறது. உங்கள் சொந்த முயற்சியிலே தொழிலை மேற்கொள்ள முன்வந்தால் உங்கள் வாழ்க்கையில் வளமும் நாட்டின் பொருளாதார வளமும் உறுதிப்படும்.

''வாலிபர்கள் ஆசிரியர்களாக வேண்டும். உலகத்தைக் கிராமத்திற்குக் காட்டவேண்டும். வாலிபர்கள் வைத்தியர்களாக வேண்டும். உடல், உள்ளம் இரண்டிலுமுள்ள நோய் தீர்க்கும் மருந்து அளிக்க வேண்டும். வாலிபர்கள் பாலம் அமைக்க நீர்த்தேக்கம் அமைக்க, உழவு முறையை மாற்றப் பணிபுரிய வேண்டும். பழமையின் பிடியிலிருந்து மக்களைப் பக்குவமாக விடுவித்துப் புதுமையின் அவசியத்தைக் காட்டிப் புத்துலகம் பாடுகளுக்கு நீங்கள் இடம் கொடுத்துவிட வேண்டாம். உயர்வு தாழ்வு என்பது சாதி வேற்றுமையால் மட்டும் இல்லை. படித்தவர் பாமரர் என்றும்கூட உயர்வு தாழ்வு காட்டப்படும் உணர்வை நாம் வளர்த்துக் கொண்டு அதன் விளைவாகச் சமுதாயத்தில் பெரும்பகுதியினரை வாழத்தகுதியற்றவர்கள் என்ற கீழ் நிலைக்குத் தள்ளப்பட்டதாக அப்போதிருந்த பெரியவர்கள் சுட்டிக்காட்டிக் கண்டித்தார்கள். அப்படிக் கீழானவர்களாகக் கருதப்பட்டவர்களை மற்றவர்களுக்குச் சமமான நிலைக்குக் கொண்டு வருவதற்காகக் கல்வி பெறும் வாய்ப்பை அளிக்க வேண்டும் என்ற ஆதங்கத்தில்தான் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் மக்கள் ஆகியோருக்கு விழுக்காடு முறையில் இடம் ஒதுக்கும் முறை கொண்டு வரப்பட்டது. இந்த உயர்வுதாழ்வுகள் எல்லா மட்டத்திலும் நமது ஒற்றுமையைக் குலைத்து, நம்மை பலவீனப் படுக்கி. நமது அக்க சக்திகளைப் பாழ்செய்ய



நம்மை முனனேற விடாமல் தடுத்தும், கெடுத்தும் வருகின்றன. இதற்கு மனத்துணிவு வெண்டும். 'துணிவுடமை என்பது உடல் உரத்தைக் குறிப்பிடுவது அல்ல, மனத்திண்மையே துணிவுடமை' என்று காந்தியடிகள் கூறினார். நல்லொழுக்கமும், மனத்திண்மையும் உள்ளவர்கள் நம்பிக்கையை எளிதில் உருவாக்குவதோடு தங்களைச் சுற்றியுள்ளவர்களையும் தூய்மைப் படுத்துகின்றனர் என்றும் காந்தியடிகள் கூறியுள்ளார். எனவே, சமுதாயத்தைப் பின்னோக்கி இழுத்துச் செல்லக்கூடிய இதுபோன்ற தீயசக்திகளுக்கு இரையாகாமல் தெளிந்த சிந்தனையுடனும், மன உறுதியுடனும், துணிவுடனும் செயல்படுவதற்கு நீங்கள் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும். எது நன்மை, எது தீமை, என்பதை அறிந்துகொள்வதற்கும், எதை ஏற்பது, எதைத் தவிர்ப்பது என்ற முடிவு எடுத்துக்கொண்டு மேலே மேலே முன்னேறுவதற்காகவும்தான் நாம் கல்வி கற்றிருக்கின்றோம்.

'' உண்மையான கல்வியின் நோக்கம், ஒழுங்கானவற்றைச் செய்வோராக மட்டுமின்றி, ஒழுங்கானவற்றில் பற்றுக்கொள்வோராகவும் உழைப்போராக மட்டுமின்றி, உழைப்பை மதிப்பவராகவும், கற்றவர்களாக மட்டுமின்றி அறிவின் மீது நாட்டமுடையோராகவும், தூயோராக மட்டுமின்றி, தூய்மையை, நியாய உணர்வும், நல்வாழ்வும் உடையோராகவும் மக்களை ஆக்குதல் வேண்டும் '' என்று காந்திஅடிகளைப் பெரிதும் கவர்ந்த பேரறிஞர் ரஸ்கின் கூறியுள்ளார்.

கல்வி கற்றுள்ள நீங்கள் அறிவொளி பெற்றுள்ளீர்கள். கண்மூடித்தனமாக எதையும் ஏற்றுக் கொள்ளாமல், தீர ஆராய்ந்த தெளிவு பெற்று முடிவுகளைத் துணிவுடன் செயலாக்குவதுதான் நீங்கள் பெற்ற கல்விக்கு அழகாகும். எந்த வழியைப் பின்பற்ற வேண்டும் என்ற தம் கருத்தை உங்கள் மீது சுமத்த எவருக்கும் உரிமையில்லை. ஆனால், எந்த வழியை ஏற்றுக்கொள்கிறீர்களோ அந்த வழி அறவழியாக இருக்கவேண்டும் என்பதை மட்டும் நான் வலியுறுத்திக் கூறுவேன். சில அடிப்படைக் கடமைகள் நம் அனைவருக்கும் உண்டு. அவற்றை ஆற்றும் வகையிலே நான் உங்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுதான். தன் ஊனையும், உதிரத்தையும் அளித்து உங்களுக்கு உயிரளித்த உங்கள் அன்னையை என்றென்றும் வணங்குங்கள். '' யாதும் ஊரே, யாவரும் கேளிர் '' என்று பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பொதுமை நெறி போதித்த, தாய்மொழியாம் செந்தமிழ் மொழியை என்றென்றும்போற்றுங்கள். உங்களை வாழவைத்து எனது குடிமகன் என்ற பெருமையை உங்களுக்கு அளிக்கும் பிறந்த தாய் நாட்டை நேசியுங்கள். ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே '' என்ற மகாகவி பாரதியின் வாக்கை நினைவில் வையுங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக உங்களுக்கு நீங்களே உண்மையாக இருங்கள். அப்பொழுதுதான், உங்கள் வாழ்க்கை மட்டுமல்லாது, உங்களை நம்பி நிற்கும் இந்த நாட்டின் வாழ்வையும் நீங்கள் உருவாக்கமுடியும், உயர்த்த முடியும். கனிவுடனும், பணிவுடனும், துணிவுடனும், பாசத்துடனும், பரிவுடனும், வாய்மையுடனும், வலிவுடனும், தூய்மையுடனும், நீங்கள் நன்மக்களாக வாழ்ந்து, உங்கள் பெற்றோருக்குப் பெருமை தேடித்தந்து, உங்களுக்கு ஆதரவு அளித்த சமுதாயத்திற்கு உயர்வு தேடித்தந்து, உங்களைக் குடிமக்களாகப் பெற்றுள்ள இந்த நாட்டிற்குச் சிறப்பைத் தேடித்தந்து, எதிர்காலத்தை ஒளிமயமாய் ஆக்க வேண்டுமென்று உங்களை வாழ்த்துகின்றேன்.

அண்ணா நாமம் வாழ்க!

**[மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் பதினாறாவது பட்டமளிப்பு விழாவில் (18-12-1982) மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர்., அவர்கள் ஆற்றிய உரை]**

# சென்னையில் பாரதி நூற்றாண்டு நிறைவு விழா



## பாரதி இன்னும் வாழ்கிறார்!

### திரு எஸ். எல். குரானா
### (மேதகு தமிழக ஆளுநர்)

பாரதி-புகழ்பெற்ற புரட்சிக் கவிஞர். ாழ்நாள் முழுதும் நாட்டுப் பற்றுடையவ ராக-தேச பக்தி கொண்டவராக அவர் ளங்கினார். அவர் நிகழ்காலத்திற்குரிய ருத்துக்களையும் எதிர்காலத்திற்கு உதவும் த்துவங்களையும் எடுத்துச் சொன்னார்.

சுதந்திரம்பற்றி-சோஷலிஸம் பற்றிப் ாடியுள்ளார். அவரது பாடல்களை இந்த ாட்டு இளைஞர்களும் இளம் பெண்களும் டிக்க வேண்டும். இளைஞர்களின் உள்ளத் ல் தேசிய உணர்ச்சியை ஊட்டியவர் அவர். பாரதநாடு எனது தாய்போல்' என்று பாடி ார். அவரது கவிதைகள் அவரை இன்னும் ாழவைக்கின்றன.

பாரதி நூற்றாண்டு விழாவை இவ் ளவு சிறப்பாகக் கொண்டாடும் தமிழக ரசை-குறிப்பாக முதல்வரை நான் மிகவும் ாராட்டுகிறேன்.



## ஒருமைப்பாட்டுக் கவிஞர்

### —திரு ஏ. ஆர். கித்வாய்
### (மேதகு பீகார் மாநில ஆளுநர்)

நான் பாரதியின் கவிதைகளைத் தமிழ் மொழியில் படிக்கவில்லையென்றாலும் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படித்திருக்கிறேன். தமிழ் அறிந்த என் மகள் மூலம் நான் விளக்கம் பெற்றிருக்கிறேன். இந்தியாவில் தோன்றிய மிகச் சிறந்த கவிஞர்களுள் பாரதியும் ஒருவர். இதை நான் தயக்கமின்றிக் கூறுவேன்.

பாரதி நூற்றாண்டு விழாவுக்கென அமைக்கப் பெற்றுள்ள மையக்குழு, பாரதியின் நூல்களை இந்தியாவின் முக்கிய மொழிகளில் எல்லாம் பெயர்த்து வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துவருவது குறித்து மகிழ்கிறேன்.

பாரதி தேசிய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் மத, இன, சாதி வேறுபாடின்றி, இந்தியர்களைப் பற்றியே பேசினார்.



## பாரதி பெயர் எந்நாளும் வாழ்க!

### திரு ஆர். வெங்கட்ராமன்

**(மாண்புமிகு இந்திய அரசு பாதுகாப்புத்துறை அமைச்சர்)**

எந்த ஒரு கனவைப் பாரதி கண்டாரோ. அது நிறைவேற்றப்படும் வகையில் பாரதி விழா நடைபெறுவதுகண்டு நான் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்திய நாட்டின் ஒற்றுமைக்குப் பாடுபட்ட பெருமை பாரதிக்கு உண்டு. அதே முறையில் பீகார் மாநில ஆளுநர், உத்தரப் பிரதேச அமைச்சர் ஆகியோரை தமிழ்நாட்டுக்கு வரும்படியாகச் செய்த பெருமை தமிழ் நாட்டு அரசுக்கு இருப்பதை எண்ணி மகிழ்ச்சி யடைகிறேன்.

சுதந்திரம் வேண்டும், சகோதரத்துவம் வேண்டும் சமதர்மம் வேண்டும் என்ற கொள்கைகளை பாரதி பரப்பி, மக்களைத் தட்டி எழுப்பிய காரணத்தால் தமிழ் மக்கள் வீறுகொண்டு எழுந்தனர். அவரைக் கவி என்றும் மகாகவி என்றும் சொன்னோம். உண்மையில் அவர் உலக மகாகவி.

அடிமை என்ற நிலை மாறவேண்டும்; ஒருவரை ஒருவர் ஏமாற்றிப் பிழைக்கும் நிலை மாற வேண்டும். உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம் கூறினார். எந்த ஒரு சமுதாயமும் மற்ற சமுதாயத்தைச் சுரண்டிப் பிழைக்கக்கூடாது என்றார். பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுவிட்டால் சமூக முன்னேற்றம் ஏற்பட்டுவிடும் என அறிந்து சொன்னார்.





## தூயவரின் தொண்டுகளைப் போற்றுவோம்!

### திரு என். கே. பி. சால்வே

**(மாண்புமிகு இந்திய செய்தி ஒலிபரப்புத்துறை அமைச்சர்)**

நான் பாரதியின் புரட்சிகரமான கவிதை ஓசையின் பெருமையை உணர்கிறேன். அடிமைத் தனத்தை ஒழிப்பதற்கு அவரது கவிதைகள் பயன்பட்டன. அவருக்கு நன்றி செலுத்த வேண்டியது நமது கடமை

தன்மானத்தை -நாட்டுப்பற்றை -வளர்க்கும்வகையில் அவர் வழங்கிய கவிதைகள் ஏராளம்.

அவர் சிறந்த கவிஞர்-சிறந்த தத்துவ மேதை- சிறந்த தேசியவாதி. அந்தத் தூய ஆத்மாவின் தொண்டுகளைப்போற்றிவாழ்த்துவோம்.

## பாரதிக்குப் பாராட்டு

### திருமதி ஷீலா கௌல்

**(மாண்புமிகு இந்திய அரசு கல்வி அமைச்சர்)**

பாரதி, இந்திய நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவர்; அவர் என்றென்றும் நினைவு கொள்ளப்பட வேண்டியவர். அவரது நூற்றாண்டு விழா நாடெங்கிலும் கொண்டாடப் படுவது மகிழ்ச்சிக்குரியதாகும். டில்லியில் பாரதியார் நூற்றாண்டு விழா அகில இந்திய அளவில் ஜனவரி, 8, 9 ஆகிய நாட்களில் கொண்டாடப்பட இருக்கிறது. அதன்பின் அனைத்துலக அளவில் கொண்டாடப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



## தீர்க்கதரிசி பாரதி

### திரு ஆர். வி. சாமிநாதன்

**(மாண்புமிகு இந்திய அரசின் வேளாண்மைத்துறை இணை அமைச்சர்)**

பாரதி உலக மகாகவி. பெரிய புரட்சிகரமான கவிஞர். தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அந்தப் புரட்சிக் கவிக்கு எடுக்கும் விழா சிறப்பாக உள்ளது.

பாரதியார், பாடலால் தேசிய உணர்வை எழுப்பினார். 40 வருடம்தான் வாழ்ந்தார். எப்போதும் விடுதலை விடுதலை என்றே முழக்கமிட்டார். அடிமையாக இருக்கமாட்டேன் என்று கர்ஜித்தார். அவர் சிறந்த புலவர். சிறந்த பாடலாசிரியர். அவர் ஒரு தீர்க்கதரிசி.



# ஈடு இணையற்ற கவிஞர் பாரதியார்

நேற்றைய நிகழ்ச்சியையும் இன்றைய நிகழ்ச்சியையும் எடை போட்டுப் பார்க்க வேண்டும். நேற்றுப் பேசிய பெண்களின் பேச்சு போராட்டத்திற்குத் தயாராக இருந்தது. இன்று இங்கே பேசிய ஆண்களின் பேச்சு, சமாதானத்துக்கு வழிவகுப்பதாக இருந்தது.

நேற்று எழுச்சியுடன் நடைபெற்ற மகளிர் பேரணியை ஊர்வலம் என்று சொல்வதா? பேரணி




என்று சொல்வதா? போராடச் செல்லும் வீராங்கனைகளின் அணிவகுப்பு என்று சொல்வதா? என்று எண்ணிப்பார்க்கும் போது எந்தப் பெயர் சொல்லி அழைத்தால் பொருத்தமாக இருக்குமோ அந்தப் பெருமைக்கு வழிவகுத்த அந்த வீராங்கனைகளுக்கு நான் தலை வணக்கம் செலுத்துகிறேன்.

அவர்களை ஊர்வலத்தில் கலந்து

களது குடும்பத்து ஆண்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். எவ்வளவு பெரிய நம்பிக்கையில் பெண்களை அவர்கள் அனுப்பியுள்ளார்கள் என்பதைக் கணக்கிட்டுப் பார்த்தால் அவர்களது தகுதியை உணர முடியும்.

என் வாழ்நாளில் இதுபோன்ற ஊர்வலத்தை இதுவரை நான் கண்டதில்லை. அதிகப் பொதுமக்களும் - அரசில் வேலை செய்யும் அதிகாரிகளும் தங்களை ஊர்வலத்தில் இணைத்துக் கொண்டு சில கிலோமீட்டா தூரம் நடந்து வரும் நிகழ்ச்சியை இதுவரை நான் கண்டதே இல்லை. நேற்று, வங்கியில் பணிபுரிவோர், தனிப்பட்ட மகளிர் அனைவரும் ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று சட்டம் எதுவும் போடவில்லை. அவர்கள் தாங்களாகவே வந்து கலந்து கொண்டது, எதிர்காலத்தைப் பற்றி நம்பிக்கை தரும் வகையில் அமைந்திருக்

நேற்று செல்வி ஜெயலலிதா அவர்கள் இங்கே ஒரு பயங்கரமான கருத்தைச் செயல்படுத்த வேண்டும் என்றார். அது பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கிறது. வரதட்சணைக்காகக் கொடுமைப் படுத்துபவர்களைத் தூக்கில் போட வேண்டும் என்று சொன்னார். அதையும் உடனே போடவேண்டுமாம், காலதாமதம் கூடாதாம். கருணை மனு போடுவதற்குக் கூட நேரம் தரக் கூடாதா? என்ன கோபம்? என்ன ஆத்திரம்? நேற்று இது பற்றிச் சிந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது.

திருமணம் செய்து கொள்ள வரும் ஆண்கள், தட்சணை கேட்பது என்றால் அது நியாயமில்லை. நான் சொல்வதெல்லாம் பெண்கள் ஆண்களிடம் தட்சணை கேட்க வேண்டும் என்பதுதான்.

''நான் படித்தவள்; பணியாற்றுகிறேன்! எனக்கு என்ன கொடுக்கிறீர்கள்?'' என்று பெண்கள் கேட்க வேண்டும். சில நேரங்களில் (Turn the table) என்று சொல்வார்கள், அந்த நிலை வர வேண்டும்.

ஸ்ரீதனம் என்கிறார்கள். ஸ்திரீ தனமா, ஸ்திரீ தானமா, எது எப்படி ஆயிற்று என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெண்களைத் தானமாகக் கொடுத்து, சொத்துக்களையும் கொண்டு செல்கிறார்கள். அப்படிக் கொண்டு செல்பவர்கள் பெண்களை வாழ வைக்க வேண்டாமா? அரைப் பவுன் நகை குறைந்து விட்டது என்பதற்காக ஒரு பெண் தற்கொலை செய்து கொள்ளும் நிலை வந்துவிட்டால், அதை அனுமதிக்கலாமா?

பாரதி நூற்றாண்டு விழாவைப் பொறுத்த அளவில் ம.பொ.சி.

கடமைப்பட்டிருக்கிறேன். இந்த பாரதி நூற்றாண்டுவிழா எட்டய புரத்தில் தொடங்கப்பட்ட போது - அவர் மருத்துவ மனை யில் இருந்தார். நான் போய்ப் பார்த்துச் சென்றேன். அதன் பிறகு அவருக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றது.

எட்டயபுரத்திற்கு வர முடிய வில்லை என்பதில் அவருக்கு இருந்த வேதனை இவ்வளவு அவ் வளவு என்று சொல்ல முடியாது. அவர், இந்த நூற்றாண்டு நிறைவு விழாவுக்குத் தலைமை வகிக் கிறார். அவர் நூற்றாண்டுக் காலத்திற்கு மேல் வாழ்ந்து ஒவ் வொரு ஆண்டும் அவரது தலை மையில் பாரதி விழா கொண் டாடப்படவேண்டும்.

முன்பு சிவாஜி கணேசன், ம.பொ.சி., படத்தயாரிப்பாளர் எம்.ஏ.வேணு மற்றும் பல கவி ஞர்கள் சேர்ந்து ஒருங்கிணைந்து மாபெரும் விழாவை எட்டய புரத்தில் நடத்தியதை நினைவு கூர்ந்து நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ரா. கிருஷ்ணமூர்த்தி என்ற கல்கி அவர்கள் பாரதிவிழாவை எட்டயபுரத்தில் நடத்தியபோது, பாரதி தேசிய கவியா, மகா கவியா என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு அவர் தேசிய கவி மட்டுமல்ல, மகாகவி என்று வாதாடினார் என்ற செய்தியைப் பத்திரிகைகளில் படித்ததை வைத்து நினைவுபடுத்திப் பார்க் கிறேன். அவர் தேசிய கவி மட்டு மல்ல, உலக மக்களுக்காகப் பாடிய கவி.

ஒருவர் உயிரோடு இருக்கும் போது கொடுக்கப்படும் பாராட்டை விட அவர் மறைந்து பற்பல ஆண்டுகளுக்குப் பின் அவருக்கு நாட்டு மக்கள் பாராட் டுக் கொடுக்கிறார்கள் என்றால் அதுதான் உண்மையான பாராட்டு அது அவரது அறிவுக்குக் கொடுக் கும் பாராட்டு.

எப்போதோ கொண்டாடப் பட்ட அந்த விழா இன்று வளர்ச்சி பெற்றிருக்கிறது. பல திட்டங்கள், மருந்தகங்கள், பள்ளிக் கட்ட டங்கள் எல்லாவற்றையும் 8 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து உருவாக்கி, அவரது பெயரைச் சூட்டியிருக்கிறோம் என்றால், அது அவரது தியாகத் தைப் பாராட்டியதாகும்.

பாரதியார் 39 வயதில் மறைந் தார். இன்று சொல்ல முடியாத விஷயங்களைக்கூட அன்றே சொல்லியிருக்கிறார். கலப்புத் திருமணம் இப்போது சாதாரண



பீகார் மாநிலத்தில் நடைபெற்ற பாரதி விழா புகைப்படத் தொகுப்பை மேதகு பீகார் ஆளுநர், மாண்புமிகு முதல்வரிடம் வழங்குகிறார்.

வளவோ பெரிய பிரச்சனையாக இருந்தது. பிராமண சமுதா யத்தைப் பார்ப்பன சமுதாயம் என்று அந்த நாளிலேயே சொன் னார் அவர். எத்தனை காலத் திற்கு முன்பு சொல்லியிருக் கிறார் என்று பார்க்க வேண்டும். ''பார்ப்பானை ஐயரென்ற கால மும் போச்சே - வெள்ளைப் பரங்கியைத் துரை என்ற கால மும் போச்சே'' என்று பாரதி அந்நாளிலேயே பாடியிருக்கிறார். அந்தத் துணிச்சலுக்கு எல்லையே கிடையாது. அவரைத் தவிர வேறு யாரும் இவ்வளவு துணி வாகச் சொல்ல முடியாது.

மக்கள் என்ற முறையில் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்.' என்ற கொள்கையில் ஒன்று திரண்டு வந்தனர்.

ம. பொ. சி. அவர்கள் பேசும் போது, நாமெல்லாம் விலகி விட்டு, பெண்களிடம் பொறுப்பை ஒப்படைத்து விடலாம் என்றார். இப்போதென்ன ஒப்படைக்கா மலா இருக்கிறோம்? எப்பவோ இந்தியாவை இந்திரா காந்தி யிடம் ஒப்படைத்து விட்டோமே! சரோஜினி நாயுடு கவர்னராக இருக்கவில்லையா? பெண்கள் முன்பும் இந்தத் தகுதியுடன்

பெண்ண றத்தினை யாண்மக்கள் வீரந்தான்
பேணு மாயிற்பிறகொரு தாழ்வில்லை.

—பாரதியார்

மதிய உணவைப் பற்றிச் சொன்னால் சிலருக்கு ஆத்திரம் வருகிறது. 'இந்து'விலே ஆதாரம் போட்டும்கூட, பலர் பேசியபடி இருக்கிறார்கள். ஆயிரம் விளக் குப் பகுதியில் 62 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பள்ளிக் கூடத்தில் மதிய உணவு கொடுக்கப்பட்டது.

ஏழைக் குழந்தைகளுக்கு மதிய உணவு இலவசமாகக் கொடுக்க வேண்டும்; துணியையும் கொடுக்க வேண்டும் என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். அதற்கு அவர்கள் என்ன சொல்லப் போகி றார்கள்?

தமிழ்நாட்டில் அறிவுக்குப் பஞ்சம் கிடையாது. பகுத்தறிவு என்று சொன்னவுடன் வேறு இடத்திற்குப் போய்ப் பார்க் கிறார்கள்.

நேற்று, பேரணியில் கலந்து கொண்ட தாய்மார்கள் கட்சி

இருந்திருக்கிறார்கள். ஆனால் அதை ஏற்றுக் கொள்ளச் சமுதா யத்திற்கு மனம் இல்லை. ஆதிக் கத்திற்கு வந்து விட்டவர்களுக்கு அதை விட்டுக் கொடுக்க மனம் இருப்பதில்லை. பதவி நாற் காலிக்கு வந்தவர்கள், மற்ற வர்கள் வெகுநேரமாக நிற் கிறார்களே, அவர்கள் உட்கா ரட்டும் என்று நினைப்பது கிடை யாது. இந்தப் பதவிப் போட்டிகள் நம்மை விட்டு நீங்க வேண்டும்.

ஜாதி உணர்வு, வகுப்புவாதம், விழுக்காடு இப்படிப் பேசப்படு கிறது. வகுப்பு வாதம் என்பது எங்கே தொடங்குகிறது? நான் இன்ன வகுப்பைச் சேர்ந்தவன். என் நண்பர்கள் இன்னார் என்று நினைக்கும்போது வகுப்புவாதம் ஏற்படுகிறது. தரம் இருக் கிறது. ஆனால் அதற்குரிய தகுதி தரப்படவில்லை. தகுதி பெற வகுப்புவாதத்தை எதிர்த் துப் போராட வேண்டும். இது



மகளிர் பேரணியில் பங்குபெற்ற பல்வேறு சங்கங்களுக்கு நினைவுப் பரிசு வழங்கினார் மாண்புமிகு முதல்வர்.

கிறதோ, அதுவரை ஒருமைப் பாட்டை எழுத்தில்தான் காண முடியும்! ஜாதிக் கட்சியை ஒழிக்க வேண்டும்; வகுப்புவாதக் கட்சியை ஒழிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் இந்திய ஒருமைப்பாட்டை ஜாதியற்ற முறையில் அமைக்க முடியும். இதை நான் சொன்னால் கோபப் படுவார்கள். இதை பாரதி யாரே சொல்லிச் சென்றிருக் கிறார். அவரது கவிதைகளைப் படிக்கிறோம்; ஆனால் வீட்டுக் குச் சென்றவுடன் வேறு மாதிரி அமைத்துக் கொள்கிறோம் வாழ்க்கையை.

''நெஞ்சில் உரமுமின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை செய்வாரடி - கிளியே-
வாய்ச்சொல்லில் வீரரடி.''

என்று பாரதியார் கூறினார். ஆண்களைப் பற்றிப் பெண் களுக்குச் சொல்லியிருக்கிறார். இது ஆண் இனத்துக்கு எவ்வளவு அவமானமாக உள்ளது?

ஜாதி உணர்வு, வகுப்புவாதம் விழுக்காடு இப்படிப் பிரித்துக் கொண்டு போனால் பலர் மனுப் போடுகிறார்கள், எங்களையும் தாழ்த்தப்பட்ட இனத்தில் சேர்த்து விடுங்கள் - பிற்படுத்தப் பட்டவர் பட்டியலில் சேர்த்து விடுங்கள் என்று கேட்கின்றனர். ஏன்? விழுக்காடு பெறுவதற்காக- பதவி பெறுவதற்காக.'

மருத்துவர்களிடம் நம்பிக்கை யுடன் உடலை ஒப்படைக்கிறோம் அவர் கல்வி கற்று, தேர்ச்சி பெற்று, பயிற்சி பெற்று அந்தப் பணியைச் செய்கிறார். ஒருவர் 30 விழுக்காடு பெற்றால்போதும் தேர்ச்சி பெறுவதற்கு, மற் றொருவர் 90 விழுக்காடு பெற வேண்டும் தேர்ச்சி பெறுவதற்கு என்ற நிலை இருக்குமானால்

இதில் யார் செய்கிற அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக இருக் கும் - திறமையாக இருக்கும் என் பதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

அதனால்தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, தனியாகப் பயிற்சி தர வேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. அதற்கேற்ற வகை யில் பயிற்சி வகுப்புகள் தரும் நிலையங்களைத் திறந்திருக் கிறோம். இதன் மூலம், வெளி நாட்டு மாணவர்களுடன் கூட இவர்கள் போட்டியிட்டு முன் னுக்கு வர முடியும்.

தாழ்த்தப் பட்டவர்களுக்கு என்று விழுக்காடு இன்றி அனை வருக்கும் விழுக்காடு ஒன்றுதான் என வைத்தால்தான் சரியாக இருக்கும். நேற்று நடைபெற்ற ஊர்வலத்தில் சுத்தப்படுத்தும் தொழிலாளர் கலந்து கொண்ட னர். அவர்களின் பிள்ளைகளுக்கு விழுக்காடு தனியாக வைக்க வேண்டாம். அவர்களுக்குத் தனிக் கல்வி தர வேண்டும் என்று பாரதி சொல்லியிருக்கிறார்.

மக்களுக்கு நெஞ்சுறுதி வேண் டும்; இது உடற் பயிற்சியால் வராது. கொள்கைப் பிடிப்பில் உள்ள உறுதியால்தான் வரும். "அடுத்த ஜென்மத்தில் உனக்குப் புண்ணியம் வரும் என்பதால் இவருக்குப் பணம் கொடு'' என்று யாரும் சொன்னால் அதற்குச் சீட்டு வாங்கத் தயாராக இல்லை என்று பாரதியார் குறிப்பிட்டி ருக்கிறார்.

பாரதியின் கருத்து உயர்ந்தது மட்டுமல்ல - சிறந்ததும் ஆகும். 39 வயதுக்குள் அவ்வளவு கருத்து. களை - மகத்தான கருத்துகளைச் சொல்லிச் சென்றிருக்கிறார். எந்த நாட்டிலும் இப்படி ஒரு கவிஞன் வந்ததில்லை என்று

சொல்வதில் தமிழ்நாட்டுக்கு உரிமை உண்டு.

மனிதர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும்? குழந்தைகள் எப்படி விளையாட வேண்டும்? பெரியவர்களின் நடத்தையை எப்படி வைத்துக் கொள்ள வேண் டும்? என்பதையும் திரும்பத் திரும்பச் சொல்லி இருக்கிறார்.

தமிழைப் பற்றி - தமிழ்நாட் டைப் பற்றிப் பாடியிருக்கிறார்; தமிழ்நாட்டைப் பற்றிப் பாடும் போது இந்தியத் துணைக் கண் டத்தை இணைத்துப் பாடினார். இந்தியா ஒன்றுதான் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந் தார். தேசிய உணர்வு கொண்டு விளங்கினார்.

பாரதி விழாவை ஆண்டு தோறும் கொண்டாட அரசு முடிவு செய்துள்ளது. இங்கே, மகாலிங்கம் தலைமையில் உள்ள ஒரு குழு மணி மண்டபம் அமைக்க இருப்பது குறித்தும் அதற்கு அரசு உதவும் என்றும் ம. பொ. சி. குறிப்பிட்டார். அதற்கு 10 லட்ச ரூபாய் தரும் என்று மூன்று ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி யிருக்கிறேன். ஆனால் யாரிடம் அந்தப் பணத்தை ஒப்படைப் பது? அது ஒரு தனி அமைப்பாக இருப்பதால் பணம் தருவதில் சில பிரச்சினைகள் உள்ளன. ஆடிட்டர் ஜெனரல் கேட்பதற் கும் எதிர்க்கட்சிகள் கேட்பதற் கும் பதில் அளிக்க வேண்டியுள் ளது. அரசுக்கும் இதில் பொறுப்பி ருந்தால் அரசின் பாதுகாப்பும் இருக்கும்; கண்காணிப்பும் இருக் கும்; அதிகாரிகளும் இருப்பர். இதை எல்லாம் நல்ல முறையில் பேசி முடிவு செய்ய வேண்டும்.

தமிழக அரசு இப்போதுதான் செய்ய வேண்டிய கடமையைத் தொடங்கி இருக்கிறது. மதிய உணவு ஒரு தொடக்கம். இல்லா மையைப் போக்கும்போதுதான் அண்ணாவின் கொள்கையை நாங்கள் நிறைவேற்றுகிறோம் என்று பொருள். அந்தக்குறையை நாங்கள் இன்னும் முழுமையாக நிறைவேற்றிவிடவில்லை.

ஆதரவற்ற முதியோர்கள் — தாய்மார்கள் ஆடவர்கள் என ஏறக்குறைய 2 லட்சம் பேருக்கு மாதம் 35 ரூபாயும் ஆண்டுக்கு 2 வேட்டிகள், 2 சேலைகள் கொடுத்து வருகிறோம். பொங் கல் திருநாள் முதல் அவர்களுக்கு மதிய உணவை வழங்க இருக் கிறோம். இந்த நாட்டில் பிறந்த வர்கள் வாழ்ந்தாக வேண்டும். வாழ உரிமை படைத்தவர்கள் வாழ்ந்தாக வேண்டும்.

பாரதி சொன்ன கருத்து அண்ணாவின் கொள்கைக்கு

வருகிறதென்பதால் அதை நாங்கள் அமல்படுத்துகிறோம்.

ஏப்ரல் மாதத்திலிருந்து வறுமைக் கோட்டிற்குக் கீழே யுள்ள குடும்பத்தைச் சேர்ந்த-வேலையில்லாத குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை தரும் திட்டத்தை அமல்படுத்த இருக்கிறோம்.

அண்ணா சொன்னார்'நாங்கள் மெல்ல மெல்ல அடி எடுத்து வைக்கிறோம்; ஆனால் அழுத்தமாக, உறுதியாக எங்கள் நடை இருக்கும்' என்று. அதுபோல் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

இந்த பாரதி விழா எந்தக் கழகத்திற்கும்-கட்சிக்கும் நடத்தப்படும் விழா அல்ல. ஊர்வலத்தில் தாய்மார்கள் கொண்டுவந்த பாரதி படம் எதைக் காட்டுகிறது? அவர்களது உள்ளத்தில் உள்ள வெப்பத்தைக் காட்டுகிறது. நேற்று, ஒரு தாய் குதித்துக் கொண்டு ஊர்வலத்தில் சென்றதைப் பார்த்தேன். அதன் பொருள் என்ன ? என் வீட்டில் திருமணம் ஆக வேண்டிய பெண் இருக்கிறாள். வரதட்சணை தருவதற்குப் பணம் இல்லாததால் விலை போக முடியவில்லை என்ற எண்ணத்தில்தான் அந்தத் தாய் சென்றார்.

பாரதியின் கருத்து, நாட்டின் கொள்கையாக மாறி, அதுதான் தமிழகத்தின் கொள்கையாக—இந்திய நாட்டின் கொள்கையாக உலக நாடுகளில்-சமதர்மம் பேசக்கூடிய நாடுகளின் கொள்கை என்ற நிலை எதிர்காலத்தில் வரும் என்பது உறுதி.

''கலியை எதிர்ப்போம்...சத்தியம் காப்போம்'' என்று பாரதி கூறுகிறார். இதை நிறைவேற்ற வாருங்கள் என்று அனைவரையும் அழைக்கிறேன்.

தேசிய ஒருமைப்பாடு என்பது வெறும் வார்த்தையில் மட்டுமில்லை-எழுத்தில் மட்டுமில்லை—ஜாதி பாகுபாடு இல்லாத நிலையில், மத உணர்வு இல்லாதநிலையில் மனிதன் என்று பொருளாதாரத்தில் வெற்றி பெறுகிறானோ அன்றுதான் ஒருமைப்பாடு வரும்.

9 ஆயிர ரூபாய்க்குக் கீழே வருமானமுள்ள குடும்பத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று ஒரு திட்டம் கொண்டு வந்த போது எதிர்த்தார்கள். அதனால் 50 சதவிகிதம் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினருக்கு எனச் சொல்லி உள்ளோம்.

முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் பொருளாதாரத்தில் பின் தங்கி இருக்கிறார்கள். அவர்களது நிலையையும் நாம் எண்ணிப் பார்க்கவேண்டியிருக்கிறது எனவே இன்கம்டாக்ஸ் கட்டாத அனைவரும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் என்று சொல்லலாமா என்று யோசித்து வருகிறோம். சமுதாயத்தில் பிறப்பால் பிற்பட்டவர்களாக யார் யார் இருக்கிறார்களோ அவர்களைப்போல, பொருளாதாரத்தால் பிற்பட்ட நிலையில் பலர் இருக்கின்றனர். அவர்கள் எதையும் அனுபவிக்க முடியாதவர்களாக இருக்கின்றனர். அவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற முறையில், பொருளாதார ரீதியிலும், சமுதாய ரீதியிலும் பயன் பெறத் தக்க அளவுக்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வரலாமா என்ற யோசனை இருக்கிறது. நியாயம் எது என்று தெரிந்து அதற்கு நீங்கள் ஆதரவு கொடுங்கள். பதவி நாற்காலி பற்றிக் கொஞ்சம்கூடக் கவலைப்படாமல் எங்கள் பணியைச் செய்கிறோம்.

பாரதி நூற்றாண்டு விழாவை ஊராட்சி ஒன்றியங்களில் எல்லாம் கொண்டாடிய அதிகாரிகள் அனைவருக்கும் நன்றி! மதம், மொழி, ஜாதி, வேறுபாடின்றி பாரதியைக்கொண்டாடிய எல்லாருக்கும் நன்றி. போஸ்டர் ஒட்டியவர் முதல் அத்தனை பேருக்கும் வாழ்த்துக்கள்! பாராட்டுகள்!

**(17-12-82ல் ஆற்றிய உரை)**

## மாநிலம் புகழும் மகாகவி!

### சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ.சி.
**(மாண்புமிகு சட்ட மேலவைத் தலைவர்)**

நாலரைக் கோடித் தமிழர்கள்-ஒவ்வொருவரும் இன்று பெருமையடைகிறோம். வான் புகழ் கொண்ட பாரதிக்குக் கிடைத்தபெருமை எளிதில் கிடைத்ததல்ல.

ஒரு பெண், பிறந்த வீட்டில் மதிக்கப்பட்டால்தான் புகுந்த வீட்டிலும் அவள் மதிக்கப்படுவாள். அதுபோல பிறந்தநாட்டில் மதிக்கப்பட்டால்தான் ஒரு மகாகவி உலக நாடுகளில் மதிக்கப்படுவான்.

மாநில அரசு பாரதி விழாக் கொண்டாட வேண்டுமென்று மைய அரசுக்குக் கடிதம் எழுத, உலக நாடுகளில் எங்கெல்லாம் இந்தியாவின் தூதரகங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் பாரதியின் பிறந்த நாள் கொண்டாடப்பட வேண்டும் என்று மைய அரசு தெரிவித்திருக்கிறது.

பெண்கள் பல்கலைக் கழகம் அமையப் போகிறது என்னும் செய்தி அறிந்து மகிழ்கிறேன்.

சுதந்திரம் வந்து 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. பெண்களுக்கு உரிமை கிடைக்கவில்லை. அந்த உரிமை கிடைத்திருக்கிறது என்பதைச் சென்னை நகரம்தான் நேற்று எடுத்துக் காட்டியது. பல்லாயிரக் கணக்கான பெண்கள் அணிவகுத்து வந்த ஊர்வலத்தை இந்தியாவே நேற்றுதான் முதன் முறையாகக் கண்டிருக்கிறது. அந்த ஊர்வலத்தில் சிரித்த முகத்தைத் தவிரச் சினந்த முகத்தை நான் காணவே இல்லை.

பாரதியின் பாடலுக்கு அந்நிய அரசு இரு முறை தடைவிதித்தது. பின்னர் பாரதியின் பாட்டுக்குத் தடை நீக்கப்பட்டு, பாரெல்லாம் பாடும் பாட்டாக அது மாறியது. அந்தக் கவிதா வேந்தன் - தெய்வம் நமக்குக்கொடுத்த பரிசு எனச் சொல்லலாம்.





# பாரதிக்கு நினைவுச் சின்னங்கள்

## திரு க. இராசாராம்

### (மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர்)

பாரதியின் நினைவாகத் தமிழகம் முழுவதும் பல கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியத்திற்குக் குறைந்தது 2 கட்டடங்களுக்காவது பாரதியின் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற முறையில் நடைபெற்றிருக்கிறது. இங்கிலாந்தைச் சேர்ந்த ஷேக்ஸ்பியர், ஷெல்லி, ஜெர்மனியைச் சேர்ந்த பிதோவன் அவர்களுக்கெல்லாம் கூட ஒரே ஒரு கட்டடம்தான் உண்டு. நோபெல் பரிசு பெற்ற தாகூருக்குக்கூட இத்தனை கட்டடங்கள் அமைக்கப்படவில்லை. அமெரிக்கக் கவிஞரான வால்ட் விட்மனுக்குக் கூட இந்த அளவு கட்டடங்கள் இல்லை என்பது வரலாற்றில் காணப்படுகிறது.

'செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற் சிந்தனை ஒன்றுடையாள்' என்று ஒரு வரியில் பாரதி பாடிவிட்டார். அதைப் பாராளுமன்றம் ஏற்றுக் கொள்வதற்கு நாங்கள் 10 ஆண்டுக்காலம் போராடவேண்டி வந்தது.

பாரதி 40 ஆண்டுகள்தான் வாழ்ந்தார். அதற்குள் அவர் எழுதிய கவிதைகள், கட்டுரைகள் என்றும் சாகாவரம் பெற்று விளங்குகின்றன. பாரதியாரை இவ்வளவு காலம் மறக்க விடாமல் செய்திருந்த தலைவர்களை நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

# திருப்புமுனை காட்டிய பெருங்கவிஞர்

## டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன்

### (மாண்புமிகு நிதி அமைச்சர்)

நெல்லைச் சீமையில் பிறந்த பாரதி சென்னைச் சீமையில்தான் மறைந்தார். எட்டயபுரத்தில் தொடங்கிய நூற்றாண்டு விழா சென்னை நகரில் நிறைவு பெறுகிறது.

வருங்காலச் சமுதாயம் பாரதியை என்றும் நினைவு கொள்ள வேண்டும் என்று கருதி நூற்றுக்கணக்கான கட்டடங்களுக்கு அவரது பெயர் வைக்கப்பட்டுள்ளது.



எந்தெந்தத்துறைகள் வளர வேண்டும்—எந்தெந்த நிலையில் வளர வேண்டும் என்று பாரதி பாடினாரோ அவற்றை நிறைவேற்றி வருகிறது தமிழக அரசு.

அரண்மனைகளில் தவழ்ந்த அழகு தமிழை ஆலமரத்தடிக்குக் கொண்டு வந்தார் பாரதி. பண்டிதர்கள் மட்டுமே பழகிய தமிழை, சாதாரண-பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில் கொண்டு வந்தார்.

காயமே இது பொய்யடா - வெறும் காற்றடைத்த பையடா என்று புலவர்கள் பாடிக்கொண்டிருந்தார்கள். வீரமும் இல்லாமல் தீரமும் இல்லாமல் இருந்த நாட்டில், வரலாற்றுப் புகழை உருவாக்கும் வகையில் பாரதியார் வந்தார். திருப்பு முனை காட்டிய பெருமைக்குரியவராகத் திகழ்ந்தார். இந்த நாட்டின் சிந்தனையையே மாற்றியமைத்த பெருமை பாரதிக்கு உண்டு.

# பாரதி புகழ் பரப்பும் தமிழக அரசு

## திரு இராம. வீரப்பன்

### (மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்)

தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் அன்பான அழைப்பை ஏற்று பீகார் மாநில ஆளுநர், மைய அரசின் கல்வித்துறை அமைச்சர், மற்றும் பல்வேறு அமைச்சர்கள் பங்கேற்கிறார்கள்.

இவ்வளவு காலமாக அந்தக் கவிஞர் பாராட்டப்பட வேண்டிய அளவுக்குப் பாராட்டப்படவில்லை. நமது புரட்சித் தலைவர் ஓராண்டுக் காலமாக மகாகவி பாரதியின் விழாவைக் கொண்டாடத் தொடங்கியபின், தமிழகம் மட்டுமில்லை, இந்தியத் துணைக் கண்டத்தின் பல்வேறு மாநில அரசுகளும், மத்திய அரசின் துணையுடன் கொண்டாடத் தலைப்பட்டுள்ளன. இந்தச் சிறப்பான நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார் நமது முதல்வர் என்பதைப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பாரதியார் எத்தனை கருத்துக்களை-எந்தக் காலத்திலேயே சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் என்பதை ஆய்ந்து மக்களுக்குத் தந்துகொண்டிருக்கிறோம். இந்த நாட்டுக்குப் பல்வேறு திட்டங்களை அன்றைக்கே வழங்கி மறைந்த காரணத்தால் ஓராண்டுக்காலம் நூற்றாண்டு விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகிறோம்.

தலைவர்கள் - தியாகம் செய்த தலைவர்கள் பலரின் நூற்றாண்டு விழாக்கள் புரட்சித் தலைவர் முதலமைச்சராக வரட்டும் எனக் காத்திருந்ததுபோலத் தெரிகிறது.





## பாரதி பெயரால் பற்பல பணிகள்

### திரு. செ. அரங்கநாயகம்

**(மாண்புமிகு கல்வி அமைச்சர்)**

விழா கொண்டாடுவது விழா கொண்டா டப்பட வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல; திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொல்வதற்கு இலக்கணமாக இந்த விழா அமைந்துள்ளது.

பெண்கள் தனித்து வாழும் தகுதியை நாம் அவர்களுக்குத் தந்தாகவேண்டும்.

தியாகம் செய்யும் வகையில் நமது குழந் தைகளை நாம் வளர்க்க வேண்டும். சாதனை புரிபவர்களாக அவர்களை வளர்க்க வேண்டும் நாட்டின் மானத்தைக் காப்பவர்களாக வளர்க்க வேண்டும். அதற்கு பாரதியாரின் கவிதைகள் மிகவும் பயன்படுகின்றன.

## பெண்குலத்துக்குப் பெருமை சேர்த்த கவிஞன்

### டாக்டர் கா. காளிமுத்து

**(மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்)**

**19-ஆம்** நூற்றாண்டின் கடைசியில் பிறந்து 20-ஆம் நூற்றாண்டில் இந்த நாட் டைத் தன் வசமாக்கிக் கொண்ட சொல்லா



ளர் பாரதி.

சொற்களைச் சோம்பல் முறிக்க வைத்து மூடத்தனத்தின் முதுகெலும்பை உடைத்த அந்த மேதை மனித குலத்தின் மனச்சாட்சி யாக விளங்கினார்.

அவரது சிந்தனைகளில் எல்லாம் சிறந் தது பெண் விடுதலைதான். பெண்ணை அதிகமாகப் பாராட்டினார்; சக்தி என்றார். சோவியத் நாட்டின் புரட்சியைப் பாடும்போது கூட 'மாகாளி கடைக் கண் வைத்தாள்; ஆகா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி' என்று வியந்து, சக்தியைப் போற்றுகிறார்.



## பாரதியின் நினைவாகப் பற்பல பணிகள்

### திரு ப. குழந்தைவேலு

**(மாண்புமிகு ஊரக வளர்ச்சி–உள்ளாட்சித் துறை அமைச்சர்)**

**பா**ரதியின் பிறந்த நாளை ஓராண்டு முழுதும் ஊராட்சி ஒன்றியங்கள், நக ராட்சிகள் கொண்டாட வேண்டும் என்று திட்டமிட்டதற்கிணங்க. ஜாதி ஒழிப்பு, தேசிய ஒருமைப்பாடு, நாட்டுப்பற்று, மொழி உணர்வு ஆகியவை குறித்து, பள்ளி, கல்லூரி, மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி, கட்டு ரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவை நடத்தப் பெற்றுப் பரிசுகள் வழங்கப்பட்டிருக் கின்றன. பட்டிமன்றம்-கருத்தரங்கம் பெரு மளவில் நடத்தப்பட்டன. பாமர மக்களுக் கும் புரியும் வகையில் பல நிகழ்ச்சிகள் ஏற் பாடு செய்யப்பட்டன.

378 ஊராட்சி ஒன்றியங்களில் பாரதி நினைவாக பள்ளிக் கட்டடங்கள் 982 திறக் கப்பட்டன. தாய் சேய் நல விடுதிகள் 30, ஒன்றிய மருந்தகங்கள் 6, சமுதாயக் கூடங்கள் 4, குழந்தைகள் காப்பகம் 1 என மொத்தம் 1023 வேலைகளுக்கு ரூபாய் 8 கோடியே 13 லட்சம் செலவிடப்பட்டது. நகராட்சி களைச் சார்ந்த பள்ளிகள் 95, மருந்தகம் 1, அலுவலகம் 3, அங்காடி 7, பேருந்து நிழற் கொடை 1, சாலை 107, பூங்கா 15, நீர்த் தேக்கத் தொட்டி-2, நீர்த்தேக்கம் 1 ஆக 232 வேலைகளுக்கு ரூபாய் 2 கோடியே 27 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1255 கட்ட டங்கள் அவரது நினைவாகத் தமிழகத்தில் எழுப்பப்பட்டுள்ளன.

## பாரதியின் கனவு நனவாகிறது!

### திருமதி கோமதி சீனிவாசன்

**(மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்)**

**சா**தி இல்லை என்பதையும் ஒற்றுமையை யும் பாரதி உணர்த்தினார். பெண் விடுதலை பற்றி எடுத்துக் காட்டினார். தாயும் பெண் தான்; தங்கையும் பெண்தான்; மனைவியைக் கொடுமைப்படுத்துவதாக எண்ணி, தாய், தங்கை அனைவரையும் கொடுமைப்படுத்து வது நியாயமா என்று கேட்டார் பாரதி. தேசிய ஒற்றுமையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

பாரதியின் கனவுகளை நனவாக்கும் வகையில் இந்த அரசு செயல்பட்டு வருகிறது. வயிற்றுக்குச் சோறிட வேண்டும்; இங்கு வாழும் மனிதருக்கெல்லாம் என்று அவர் பாடினார். குழந்தைகள் எதிர்காலத்தில் நல்ல முறையில் விளங்க வேண்டும் என்ப தற்காகப் புரட்சித் தலைவர் 65 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கி வரு கிறார்.






# சென்னை மாநகராட்சியின் குடும்பநலப் பணி

சென்னை மாநகரர்ட்சி மக்களின் அடிப்படை வசதிகளான துப்புரவுப் பணி, சாலை வசதிகள் வீதிவிளக்குப் பராமரிப்பு, பொதுச் சுகாதாரம், மலேரியா ஒழிப்பு, கல்வி, மரம் வளர்த்தல், வெள்ளம், தீ, போன்ற இயற்கையால் விளைகின்ற தீமைகளுக்கான நிவாரணங்கள் போன்ற பணிகளில் மக்களுக்குச் சேவை செய்து வருகின்றது. இவற்றில் குடும்பநலத் திட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்துச் செயல்பட்டு வருகிறது.

குடும்பம் -சமுதாயத்தின் ஒரு அடிப்படை அங்கம், பல குடும்பங்களின் கூட்டே நமது சமுதாயம். இச்சமூகம் நலம்பெறக் குடும்ப நலத்திட்டம் இன்றியமையாததாகும்.

குடும்ப நலத்திட்டத்தை மாநகராட்சி ஆரம்பித்த காலத்தில் சென்னை நகரின் மக்கள் தொகை 16 இலட்சமாக இருந்தது. அது தற்போது 32 இலட்சமாக உயர்ந்துள்ளது. இதிலிருந்து மக்கள் தொகை குறுகிய காலத்தில் இரட்டிப்பாக உயர்ந்துள்ளது என்பது தெளிவு. எந்த அளவிற்கு மருத்துவ வசதிகள், பேருந்துகள், சாலைகள், மின்வசதி குடிநீர், பொதுச் சுகாதாரம் எனப் பல வசதிகளை விரைந்து பெருக்கினாலும் பெருக்குகின்ற மக்கள் தொகைக்குப் போதியவையாக

எனவே, சென்னை நகரின் குடும்ப நலத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாநகராட்சி முழுப் பொறுப்பையும் ஏற்றுச் செயலாற்றி வருகின்றது. தற்போது சென்னையில் 48 குடும்ப நல நிலையங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் 32 மாநகராட்சியின் நேரடி நிர்வாகத்திலும், 4 அரசினர் மருத்துவ மனைகளிலும், 12 தன்னியக்க நிறுவனங்களாலும் ( Voluntary Organisation ) நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு குடும்ப நல நிலையத்திலும், ஒரு மருத்துவர், 4 குடும்ப நலக் களப்பணியாளர்கள் பணி புரிகின்றனர். எல்லாக் குடும்ப நல நிலையங்களிலும், மருத்துவப் பரிசோதனை, மருத்துவச் சிகிச்சை, கருத்தடை ஆலோசனை, கருத்தடைச் சாதனங்கள் வழங்குதல், குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் நோய்த்தடுப்பிற்கான ஊசிமருந்து கொடுத்தல், ஊட்டச்சத்து மாத்திரை வழங்குதல், நிரந்தர அறுவைச் சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தல் ஆகிய பணிகள் நடைபெறுகின்றன. சுருக்கமாகக் கூறினால், குடும்ப நலத் திட்டத்தில், ஆணுக்கும் பெண்ணுக்கும் உரிய திருமண வயது எது என்று கூறுவதிலிருந்து, அவர்கள் முதல் குழந்தையைத் தாமதப்படுத்துவது, இரண்டாவது குழந்தையைப் போதிய இடைவெளி விட்டுப் பெற்றுக் கொள்வது, இரண்டுக்கு மேல் நிரந்தரமாகக் குழந்தைப் பேற்றை நிறுத்திக் கொள்வது, கருவுற்ற தாய்மார்கள் நல்ல முறையில் குழந்தையைப் பெறப் போதிய கவனிப்பும், பாதுகாப்பும் வழங்குவது, பிறந்துவிட்ட குழந்தைகளை நோய் நொடியின்றிப் பாதுகாத்தல் போன்ற குடும்ப நலத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் நிறைவேற்றப் படுகின்றன. அத்துடன், குழந்தையே இல்லாதவர்களுக்கும், குழந்தை பெறச் சோதனைகள் செய்து, சிகிச்சைகள் அளித்து, குழந்தை பெற உதவுவது கூட, குடும்பநலத் திட்டத்தின் குறிக்கோளாகும். இவையனைத்தையும், எந்தவிதக் கட்டாயமுமின்றி, தம்பதியர் தாங்களாகவே முன்வந்து குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக் கொள்ளும் வண்ணம் விளக்கிக் கூறப்படுகின்றது. பொதுவாக, அறுவைச் சிகிச்சை முறையை மட்டும் வலியுறுத்தாமல், தற்காலிக முறைகளான கருத்தடை வளையம், கருத்தடை மாத்திரைகள் போன்ற தற்காலிக முறைகளைப் பற்றியும் எடுத்துக் கூறப்படுவதுடன், அனைத்தும் இலவசமாகவே வழங்கப்படுகின்றன.

**சூ. ர. கருப்பண்ணன், இ. ஆ. ப.,**
**ஆணையாளர் :**
**சென்னை மாநகராட்சி**

மாநகராட்சியின் சிறப்பு அதிகாரியின் தலைமையில், ஆணையர், மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சேவா சங்கங்களின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு 'ஆலோசனைக் குழு அவ்வப்போது கூடி



# பனையின் பெருமை

மணப்பாடு கை வண்ணத் தட்டுகளும், மெய்ஞ்ஞானபுரம் கூடைகளும், இராமநாத புரம் நார்ப் பெட்டிகளும், தென்காசி வர்ணக் கடகங்களும், நகரத்தார் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் வக்கூடு பெட்டிகளும், திருப்புல் லாணி மக்கள் செய்யும் கைப்பைகளும், நாகூர் மக்கள் செய்யும் மடக்கு விசிறிகளும், சித்தார்க்கோட்டை வர்ணத் தடுக்கும், இராம நாதபுரத்துக் குருத்தோலைப் பாய்களும், தங்கச்சிமடம் கட்டுப்பாய்களும், உடன்குடி உயர்தர வெல்லமும், திருச்செந்தூர் சுக்குக் கருப்பட்டியும், பனங்கற்கண்டும், சாயல்குடி கருப்புக் கட்டியும், ஸ்ரீவில்லிபுத்தூர் பொடி வட்டும், கோவை மாவட்டத் தென்னை வெல்லமும், குமரப்பாபுரம் உண்பொருள், உண்ணாப் பொருட்களும் தமிழகத்தின் தலைசிறந்த பனைப்பொருள்களாகும்.

வேலை வாய்ப்பைக் குறைக்காமலும், உற்பத்தியைப் பெருக்கவும், தும்பு அடிக்கும் பெண்கள் சிரமத்தைக் குறைக்கவும், பத்த லடிக்கும் மின் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. இக்கருவிகளை, பத்தல் அதிகமாகக் கிடைக்கும் கிராமங்களில் நிறுவினால் பெண்கள் இலகுவில் பத்தலடித்துத் தும்பைச் சேகரித்துக் கொள்வார்கள். தினம் ரூ. 5 சம்பாதிக்கும் பெண்கள் குறைந்தது ரூ. 8 வரை சம்பாதிக்க இயலும்.

சாரோலைப் பாயை விரைவில் பின்னவும், அதிக வருமானம் பெறவும் பாய் பின்னும் கருவி ஒன்று முன்னாள் இராணுவ வல்லுநர் ஒருவரால் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக் கிறது.

தமிழகத்தில், நடைபெறும் பனைத் தொழில் வளர்ச்சியானது, இந்தியாவிலேயே முதல் இடத்தைப் பெறுகிறது.

பனைத்தொழில் தெரிந்தவர்களுக்கு 1,600 பனைவெல்ல, பனையோலைக் கூட்டு றவுச் சங்கங்கள் இயங்குகின்றன. பனை நடும் திட்டம் மாநிலம் முழுவதும் செயல் படுத்தப்படுவதால், இன்னும் 10 ஆண்டு களில் மேலும் ஒரு கோடி மரங்கள் பயன் தரக் கூடியனவாக இருக்கும்.

ஏற்கெனவே வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பெரும்பாலோர், பனையிலிருந்து கிடைக்கும் வெல்லம், ஓலை, மட்டை, ஈர்க்கு, நார்த் தும்பு ஆகியவற்றை உபயோகித்து வாழ்கின்றனர்.

---

ஆலோசனைகளைக் கூறி வழி நடத்திச் செல்கின்றது. குடும்ப நல அலுவலர்கள் குடும்ப நல நிலையம் நாடி வரும் தம்பதியர் களுக்கு மட்டுமின்றி, அவர்களது வீடு, பணியாற்றும் இடங்கள், பொழுதுபோக்கு மன்றங்கள், முக்கியமாகக் குடிசைப் பகுதிகள் என மக்களைத் தேடிச் சென்று குடும்பநலத் திட்டத்தின் நன்மை களை, நாடகம், குழு விவாதம், பொதுக் கூட்டம் ஆகியவற்றின் மூலமாகவும், திட்ட விளக்கம் கூறிச் செய்து வருகின்றனர். இவை தவிர பொருட்காட்சிகளி லும் அரங்கங்கள் அமைத்துக் குடும்பநலம் பற்றி எடுத்துக் கூறு கிறார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, ஆங்காங்கே பகுதித் தலைவர்களைக் கூட்டி, குடும்ப நலத் திட்டத்தைப் பற்றிய ஒரு நாள் பயிற்சி முகாம்களை நடத்தி அவர்களுக்குத் திட்டத்தின் நோக்கம், செயல்படும் விதம், குடும்பநல முறைகள், வதந்தி களைத் தவிர்க்கும் வழி, சந்தேக விளக்கம், தலைவர்களின் பங்கு போன்றவற்றைத் தெளிவாகவும், விரிவாகவும் எடுத்துக் கூறி, திட் டத்தை அவர்கள் பகுதியில் செம் மையாக நிறைவேற்றவும் பாடு படுகின்றனர். இந்த ஆண்டு மா நகராட்சி 400 பயிற்சி முகாம்கள் நடத்துவதற்காக ஒரு இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளது. இது வரை 100க்கு மேலாகப் பயிற்சி முகாம்கள் வெற்றிகரமாக நடத் தப்பட்டுள்ளன.

இயங்கி வரும் 48 குடும்பநல நிலையங்களில், 8 நிலையங்கள் கடந்த செப்டம்பர் மாதம் புதிதாகத் துவக்கப்பட்டவை. மேலும் அறுவைச் சிகிச்சை வசதி யும், நவீன அறுவைச் சிகிச்சை ''லேப்ரோஸ்கோப்பி'' எனப் படும் சிகிச்சை வசதி உள்ளிட்ட பல வசதிகள் கொண்ட 4 மகப் பேறு பினபணி நிலையங்களுக்குத் (Post Partum Programmes) தமிழ் நாடு அரசு அனுமதி வழங்கி, அவை விரைவில் சிறப்பாகச் செயல்படும் நிலையில் உள்ளன.

குடும்ப நலத் திட்டத்தில் 1973-74ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 1978-79 வரை சிறப்பான சாதனை புரிந்ததற் காக அரசு விருதுகளை மாநக ராட்சி பெற்றுள்ளது. 1981-82ல் கொடுக்கப்பட்ட இலக்கை இரண்டு மடங்கு அளவில் நிறை வேற்றிச் சாதனை புரிந்துள்ளது. இந்த ஆண்டு, கடந்த ஆண்டின் சாதனையைவிட இரண்டு மடங் கிற்கும் மேலாகச் சாதனைபுரிய எண்ணித் திட்டமிட்டுச் செயல் பட்டு வருகின்றது. 1982-83 அக்டோபர் மாதம் முடிய 15,114 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை நடைபெற்றுள்ளது.

அறுவைச் சிகிச்சை செய்து கொள்ளும் பெண்களுக்கு ஊக்கத் தொகையாகத் தலைக்கு ரூபாய் 130ம் ஆண்களுக்கு ரூபாய் 100ம் அரசு வழங்குகிறது. அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர் களுக்குப் பின்கவனிப்புகளுக் கான ஏற்பாடுகள் நல்ல முறை யில் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் ரோட்டரி சங் கங்கள், அரிமா சங்கங்கள், அரிமா நங்கையர் சங்கங்கள், ஜேஸீஸ் சங்கம், மயிலாப்பூர் மகளிர் வட்டம்-4, இந்திய மகளிர் சங்கம், உழைக்கும் மகளிர் அணி போன்ற பல தொண்டு நிறுவனங் கள் மாநகராட்சியுடன் ஒத்து ழைத்துப் பரிசுப் பொருட்களாக வும், திட்ட விளக்கம் மற்றும் விளம்பரப் பணிகளில் நேரிடை யாகவும் ஈடுபட்டு உதவி வரு கின்றது.

தகுதி வாய்ந்த தம்பதிகள்-அனைவரும் இத்திட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டு, குடும்ப நலத்திட்டம் வெற்றிகரமாக நடத்தித் தங்களது முழு ஒத் துழைப்பை நல்குமாறு மாநக ராட்சி வேண்டிக் கேட்டுக்கொள்

# முதியோர் வாழ்வில் புதியதோர் திருப்பம்!

நமது சமுதாயத்தில் மாதா, பிதா, குருவிற்கு அடுத்தபடியாக மதிப்புக் கொடுத்து வருவது நமது முதியோர்களுக்குத் தான். வயது முதிர்ந்தவர்க்கு மதிப்புக் கொடுப்பது, அவர் அறிவுரைப்படி நடத்தல், அவர் சொல்படி கேட்டல், எந்த ஒரு பிரச்சினைக்கும் அவர்களது அனுபவத்தின் சொற்களை கேட்டு அதன்படி நடத்தல் - இவை நமது பண்பாட்டின் ஓர் அங்கம்! இது, நீண்ட காலம் தொட்டு நடந்து வருகின்ற ஒன்றாகும்.

இன்றும்கூட கிராமப்புறங்களில் ஒரு வீட்டிலோ- கிராமத்திலோ, - தனிநபர் பிரச்சினையிலோ - எதுவாக இருந்தாலும் அவர்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண முதியோரின் உதவியை நாடுவது நமது வழக்கத்தில் இன்றும் நடைபெறும் ஒரு நிகழ்ச்சியாகும்.

வரலாற்று ஏடுகளை நாம் திருப்பிப் பார்த்தால், அரசர் தமது அமைச்சரவையில் அறிவு வாய்ந்த முதியோர்களைப் பேணிக் காத்தலைத் தமது அரசவைக்கே ஒரு தனிச் சிறப்பாகக் கருதி வந்தார்கள். அதியமான் அரசவையில் ஔவை, பாண்டியன் அவையில் நக்கீரன்.

எனவே முதியோர்கள் அனுபவம், திறமை, தொடர்ந்து வருகின்ற மரபு, முறைகளைப் பேணிக் காத்து அடுத்து வரும் பரம்பரைக்குப் புகட்டுதல், குடும்பத்தைப்பேணிக்காத்தல், நீதி நெறிமுறைகளை சிறுவர் இளம் வயதினர்களுக்கு வழங்குதல், நீதி, நியாயங்கள் வழங்குதல், திருமணம் சாஸ்திரம் முதலியவைகளை முன் நின்று நடத்தி வைத்தல் போன்ற அரும்பெரும் சாதனைகளை நமது சமுதாயத்தில் நடத்திக் கொண்டு வந்திருக்கின்றனர். எனவே முதியோர்கள் குடும்பம் நாடு, தேசம், வளர்ச்சிக்கு ஒரு பங்காக இருந்துவருகிறார்கள்.

மக்கட் பெருக்கத்தின் காரணமாகவும், மருத்துவ வளர்ச்சி



காரணமாகவும் (பிறப்பின் எண்ணிக்கை அதிகரித்தலும், இறப்பின் எண்ணிக்கை குறைதலும்) போன்றவற்றின் காரணமாக முதியோர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது

''இவர்கள் உலகில் இருந்தென்ன சாதிக்கப்போகிறார்கள்?''

''இவர்கள் வாழ்வதால் யாருக்கு இலாபம்?''

''இவர்கள் இருந்தும் ஏன் தொந்தரவு செய்து வருகிறார்கள்?''

இவை யாவும் முதியோர்களைப் பற்றி மக்கள் மத்தியில் நிலவுகின்ற எண்ணங்கள் ஆகும். (முதியோர் நல மையம் (ஸிவா), சென்னை 40ல் உள்ள நடுவக்கரைப் பகுதியில் மக்கட் கணக்கெடுப்பு நடந்தபோது மக்கள் முதியோரைப் பற்றிக் கூறிய எண்ணங்கள் ஆகும்.

இந்த வாசகங்கள் முதியோரைப் பற்றி மக்கள் மத்தியில் நிலவி வரும் எண்ணங்கள் எத்தகையன என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

இதுபோன்ற எண்ணங்கள் மக்கள் மத்தியில் நிலவுகின்றமைக்குக் கீழ்க்கண்டவைகள் காரணங்களாக இருக்கின்றன. அவை பெருகிவரும் மக்கள் தொகை; சமுதாய மாற்றம்; தொழில் வளர்ச்சி; தனிக்குடும்பம்; நகர வளர்ச்சி; மேல்நாட்டுமோகம்; வறுமைக் கோட்டின் கீழ் வாழும் வாழ்க்கை; உற்பத்தித் திறன்குறைவு போன்றவைகள்தாம்.

முதியோர்களும் தங்களைப் பற்றித் தாழ்வு மனப்பான்மையுடன், தங்களை இரண்டாந்தர மக்களாகவே நினைக்கின்றனர்.

''நாம் ஏன் இன்னும் உயிருடன் இருக்கிறோம்? எமன் நமது ஏட்டை எடுக்காமல் இவர்களுடன் மரியாதை குறைந்தும், வேதனையடைந்தும் வாழ்க்கை நடத்த வேண்டியதாக உள்ளதே!''

''மனைவி, மக்கள் இருந்தும் என்னபயன்? கடைசிக் காலத்தில் கஞ்சிகூட ஊத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் பார்த்து எதாவது கொடுத்தால் தான் காசு, இல்லையேல் பட்டினி''.

—இதுபோன்ற வாசகங்கள் முதியோர்கள் தங்களைப் பற்றிக் கூறுகின்ற எண்ணங்களாக இருந்து வருகின்றன. நமது நாட்டின் மக்கள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது போல் முதியோர்களின் எண்ணிக்கையும் வளர்ந்து வருகிறது. 1981-ம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி இப்போது இந்தியாவில் மொத்தம் 4 கோடி (60 வயதிற்கு மேற்பட்டவர்கள்) முதியோர்களும், 5கோடி (50 வயதிற்கு மேற்பட்டவர்கள்)5 கோடியினரும் உள்ளனர். இவர்களில் 67%. அதாவது மூவரில் இருவர் வேலைக்குச் செல்லாதவர்களாக உள்ளனர்.

முதியோர்கள் உடல் நலக் குறைவுகூட வேலையின்மை, தன்னையும். தன் குடும்பத்தையும் காப்பாற்ற இயலாத நிலை, மக்கள் மத்தியில் நிலவி வரும் கருத்துக்கள், குடும்ப நபர்களின் ஆதரவில் வாழும் வாழ்க்கை, மரணத்தை எதிர் நோக்கும் எண்ணங்கள் மேற்கூறிய பிரச்சினைகளே முதியோரைச் சார்ந்த பிரச்சினைகள் ஆகும்.

இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு அரசும், தனியார் சமூக சேவை நிறுவனங்களும் இரண்டு வழிகளைக் கையாளுகின்றன. ஒன்று, அரசு நிறுவனம் சமுதாய உதவித்திட்டத்தின் (Social Assistance) கீழ் தனியார் சமூக சேவை நிறுவனங்கள் முதியோர்களுக்கு என்று முதியோர் இல்லம் அமைத்து அந்த இல்லத்தின் மூலம் சேவை செய்துவருகின்றது.

> ## குஜராத் மாநிலத்திற்கு தமிழக அரசு வழங்கியுள்ள புயல் நிவாரண நிதி
>
> **குஜராத் மாநிலத்தில் நவம்பர் 8ஆம் நாளன்று வீசிய பெரும் புயல், அங்கு மிகுந்த சீரழிவை ஏற்படுத்தி விட்டது. நிவாரணப் பணிகளுக்கு உதவும் வகையில், தமிழக அரசு, முதல்வர் பொது நிதியிலிருந்து ரூ. 2 லட்சத்தை நிதியாக வழங்கியுள்ளது.**

முதியோர்களுக்கு உதவித் தொகை: முதியோர் இல்லத்தின் சேவைகள் மூலம் இந்தப் பிரச்சனைகள் தீர்ந்ததாக தெரியவில்லை. முதியோர்களுக்கு தங்களது வீடு, இருப்பிடம், சுற்றத்தார்களை விட்டு முதியோர் இல்லத்தில் வாழ பெரும்பாலும் விருப்பமில்லை. வீட்டில் பேரக் குழந்தைகள், சுற்றத்தார்கள், நண்பர்கள், வேலை செய்த இடத்திலிருந்து நண்பர்களை விட்டுத் தனியாக ஓர் இல்லத்தில் இருக்கவும் மனமில்லை.

வீடு, குடும்பம், சுற்றுப்புறச் சூழ்நிலை, சமுதாய மாற்றம் காரணமாக முதியோர்களுக்குச் சரிவரப் பாதுகாப்புக் கொடுக்காமல் இருந்து விடுகிறார்கள். போதுமான முதியோர் இல்லங்களும் நமது நாட்டில் இல்லை. இந்த முதியோர்களை அவர்கள் வாழும் இல்லங்களிலும் வசிக்கும் இருப்பிடங்களிலும், மற்றும் குடும்ப சூழ்நிலையைப் பேணிக்காத்து வந்தால், நம் நாட்டில் முதியோர் இல்லங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

எனவே முதியோர்களை தனியாக வீட்டிலிருந்து பிரித்து, அவர்கள் கட்டுப் பாட்டுடன் உள்ள நிலையான ஒழுங்கு அமைப்பு முறையில் அவர்களுக்குச் சேவை செய்வதின் மூலம் அவர்களது பிரச்சினைகள் தீரா என்றும், அவரவர் இல்லத்திலே மற்றும் வசிக்கும் இருப்பிடத்திலே சேவை (Family and community approach) செய்வதின் மூலம் அவர்களது பிரச்சினைகள் தீரும் என்ற கருத்தை முழுமையாகக் கொண்டு உருவானதுதான் முதியோர் நல மையம். (ஸிவா) Centre for the welfare of the aged என்ற ஒரு சமூக சேவை நிறுவனம் ஆகும்.

இந்த நிறுவனத்தின் முக்கிய கோட்பாடு, முதியோர் அவர்களது குடும்பம் சமுதாயத்தின் ஒத்துழைப்பையும், இருப்பிடத்தைச் சார்ந்த சுற்றுப்புறச் சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு Non Institutional approach அவர்களது வாழ்வை வளமாக்குவது! இந்தக் குறிக்கோளைக் கருத்தில் கொண்டுதான் முதி

யோர் நல மையம் (ஸிவா) தனது சேவைகளை முதியோர்களுக்கு சென்ற டிசம்பர் 1981 முதல் செய்து வருகின்றது. இந்தச் சமூக சேவை நிறுவனம் இந்திய முதியோர் நற்பணி மன்றம் (Helpage India) ஒத்துழைப்புடன் சேவைகளைச் செய்து வருகின்றது. முதியோர்களின் நல்வாழ்விற்கு, முதியோர் நல மையம் (ஸிவா)பின்வரும்சேவைகளைச் செய்து வருகின்றது.

### 1. முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையம் (Day Centre):

முதன் முதலாக, சென்னையில், நடுவக்கரையில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர். காலனியில் வாழ்ந்து வரும் குடிசை மக்களுக்கு முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையம் சென்ற டிசம்பர் 1981ல் துவக்கப்பட்டது. இந்தக் குடிசைப் பகுதியில் வாழும் மக்களிடம் கலந்து உரையாடியும், முதியோர்களை அழைத்துக் கலந்து பேசியும் - இந்தப் பாதுகாப்பு நிலையம் துவங்கப்பட்டது. முதலாவதாக முதியோர்களுக்கு நடத்தப்பட்டு, அதில் முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையத்தின் கருத்துக்களையும், அதன் தத்துவத்தையும் முதியோர்களுக்கு விளக்கின. அதன் பிறகு வீட்டுக் கணக்கெடுப்பு நடக்க துவங்கியது.

மருத்துவ உதவி செய்யப்பட்டது. மக்களுக்கு முதியோர்களை பேணிக் காப்பதின் அவசியத்தையும், தினசரி பாதுகாப்பு நிலையத்தின் நோக்கத்தையும் தெரியப்படுத்தியது. இந்தக் குடிசைப்பகுதியில் வாழும் ஒரு பெண்மணி தனது குடிசையை இந்தத் தேவைக்காக தர முன்வந்தார். இந்தக்குடிசையில்தான் தினசரி பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் முதியோர்களுக்குச் சேவை செய்து வருகிறது. எனினும், இந்த நிறுவனம் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திடம், இந்தப் பாதுகாப்பு நிலையம் அமைப்பதற்கு ஒருவெற்றிடம் கேட்டுக் கொண்டு இருக்கிறது.

வீட்டுக் கணக்கெடுப்பின்படி இந்தக் குடிசைப் பகுதியில் 108 முதியோர்கள் (50 வயதிற்கு மேற்பட்டவர்கள்) வாழ்ந்து வருகிறார்கள். இவர்களில் 63 பேர் ஆண்கள், 45 பேர் பெண்கள். இதில் வேலைக்குச் செல்லாதவர்கள் 43 நபர்கள், மற்றும் உள்ள 65 நபர்கள்வேலைக்குச் செல்பவர்கள். இந்தக் கணக்கெடுப்பின் முடிவுகளையும், அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் முதலியவற்றையும் கூறி அவைகளைச் செயல்படுத்துவதற்கு உறுதி கொண்டனர். அவர்களுக்குத் தமிழில் சொல்லிக் கொடுத்து, அவர்களைக் கலந்துஉரையாடச்சொல்லியும் இந்த நிலையத்தின் மூலம் இங்குள்ள 108 முதியோர்களுக்கு சேவை செய்ய முற்படுகிறது. மற்றும், இந்தக் குடிசைப்பகுதியின் அருகில் உள்ள இதர இரண்டு குடிசைப்பகுதிகளில் உள்ளமுதியோர்களுக்குசேவை செய்ய முற்பட்டு உள்ளது. இந்தப் பகுதிகளில் கூட கணக்கெடுப்பு நடத்தி வருகிறது.

இந்த எம்.ஜி.ஆர். காலனியில் வாழும் முதியோர்கள் தங்களுக்கு என ஒரு முதியோர் சங்கம் அமைத்துள்ளனர். இந்தச் சங்கம் மாதத்திற்கு குறைந்தபட்சம் இருமுறையாவது கூட்டம் நடத்தி, அவர்களது பிரச்சினைகளைக் கலந்துரையாடித் தீர்வு காணும்.

இந்த முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையத்தில் முதியோர்களுக்கு என ஒரு முதியோர் மருத்துவ நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மருத்துவ நிலையம் வாரத்திற்கு மூன்று நாட்கள் செயல்படும். மற்றும் அரசு பொது மருத்துவ மனை (முதியோர் புற நோயாளி பிரிவு, சென்னை-3) முதியோர்களுக்கு இலவச மருத்துவ முகாம் குடிசைப் பகுதியில் நடைபெற்றது. மற்றும் முதியோர்களுக்கு கண்ணாடிகளும் வழங்கியுள்ளது.



முதியோர்களின் தொழில் வளர்ச்சிக்காக, பேங்க் ஆஃப் பரோடா, தியாகராய நகர் கிளையின் மூலம் கடன் உதவி அளிக்கப்படுகிறது. மற்றும் முதியோர்களுக்கு தினசரி காப்பு இல்லத்திலேயே பை உறைகள், ஊதுவத்தி செய்தல் போன்ற வேலை வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

முதியோர்களுக்குத் தினசரி பாதுகாப்பு நிலையத்தில் தற்போது ஏறத்தாழ 20 நபர்களுக்கு உணவு அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகிறது. மற்றும் சுற்றியுள்ள இரண்டு குடிசைப்பகுதியில் 50 நபர்களுக்காவது உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

முதியோர்களுக்கு தினசரி பாதுகாப்பு நிலையத்தில், அவர்களுக்கு தினமும் நாளேடு, கதைப் புத்தகங்கள் படித்தல், வார இதழ்கள் படித்தல், விளையாடுதல் மற்றும் அவர்களைக்கோவில்களுக்கு அழைத்துச் செல்லுதல் போன்ற சேவைகளும் செய்து வருகின்றனர்.

**2. முதியோர் வசிக்குமிடத்தில் மருத்துவ சேவை:**

முதியோர் நல மையம் (ஸிவா), கை, கால், இழந்த மற்றும் உடல் ஊனமுற்ற முதியோர்களுக்கும், நோய்வாய்ப்பட்டுப் படுத்த படுக்கையில் உள்ள முதியோர்களுக்கும் அவர்களின் வீடுகளுக்குச் சென்று மருத்துவ உதவி அளித்து வருகின்றது. உடல் ஊனமுற்ற முதியோர்களுக்கு அவர்களது தேவைகளுக்கு ஏற்ப சக்கர நாற்காலி (Wheel Chair) வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தல்; கை கால் முடநீக்கு பயிற்சி அளித்தல், மற்றும் மருத்துவர் அவரதம் வீடுகளுக்குச் சென்று வைத்தியம் செய்தல் போன்ற சேவைகளைச் செய்து வருகின்றன. மேலும் உடல் ஊனமுற்ற முதியோர்களுக்கு வேலை செய்ய விருப்பமிருந்தால், அவர்களது திறமைக்கு ஏற்ப வேலை வாய்ப்பு அளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

**3. முதியோர் வேலைவாய்ப்புச் சேவை**

[illegible] வேலை

## நுங்கும் இளநீரும்

* **நூறு கிராம் இளநீரில் சுமார் 0.1 கிராம் புரதச்சத்துள்ளது.**
* **நூறுகிராம் நுங்கில் சுமார் 0.7 கிராம் புரதச் சத்து உள்ளது.**
* **நுங்கைவிட இளநீரில் கொழுப்புச் சத்தும் பாஸ்பரசும் அதிகம்.**

கள் என்றும், அவர்களும் நாட்டுப் பொருளாதார பகுப்பில் பங்கு உடையவர்கள் என்ற ஒரு கோட்பாட்டையும் இந்த முதியோர்கள் நல மையம் கருதுகின்றது. எனவே முதியோர்களின் திறமை, தொழில் அனுபவம், உடல் நலத் திறன் இவற்றைக் கொண்டு அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து வருகிறது.

மற்றும் முதியோர் சுய வேலை வாய்ப்பின் கீழ் அவர்களுக்குப் பண உதவியும் செய்கின்றனர். முதியோர் உதவித் தொகை கிடைக்க உதவியும் செய்து வருகின்றனர்.

எம்.ஜி.ஆர். காலனியில் உள்ள முதியோர் தினசரி பாதுகாப்பு நிலையத்தில் கவர், உறைகள் செய்யும் ஒரு வருமானம் வரக்கூடிய தொழில் செய்யப்படுகிறது.

**4. முதியோர் மருத்துவப் பிரிவில்—சமூக சேவை**

அரசு பொது மருத்துவமனை முதியோர் பிரிவு சென்னை-3

வயது முதிர்ந்த முதியோர்கள் மருத்துவமனைக்கு தங்கள் உடல்நலம் - குறைகளை சோதித்து, மருந்துகளைப் பெறுவதுடன் தங்கள் குடும்பம், பொருளாதாரம், மனப் பிரச்சினைகளையும் கூறுவர். எனவே இங்குவரும் முதியோர்களுக்கு அவர்களது பிரச்சினைகளுக்கு ஏற்ப சேவை அளிக்கப்படுகிறது.

**5. முதியோர் இல்லத்தில் சமூகப் பணி**

முதியோர்களை வீட்டை விட்டு தங்கள் குடும்பச் சூழ்நிலையை பிரிந்து அவர்களை முதியோர் இல்லத்தில் காப்பது, அவர்களுக்கு தனிமையில் வாழும் வாழ்க்கையும் மற்றும் சமுதாயத்தில்மற்றவர்களுடன் எண்ணம், ஏற்படுகிறது. இந்த எண்ணங்களை நிறைவு செய்வதற்கும், மற்றும் அவர்களை வீட்டில் இருப்பதுபோல் பேணிக் காப்பதுடன் அவர்களுக்கு சமூக சேவையும் செய்து வருகின்றன.

குறிப்பாக, சென்னை இராயபுரத்திலுள்ள ராஜா வெங்கடகிரி-மாணிக்கர் முதியோர் இல்லம் முதியோர்களுக்கு மருத்துவ வசதி செய்தல் பொழுது போகும் சாதனங்கள் அமைத்தல் கோவில்களுக்குச் சென்று வருதல் போன்ற பல சமூகப் பணியில் ஈடுபட்டுள்ளது.

**6. முதியோரைப்பற்றி ஆராய்ச்சியும், வெளியீடுகளும்**

முதியோர் நல மையம் (ஸிவா), முதியோரைப்பற்றி ஆராய்ச்சியும், அவர்களைப் பற்றி வெளியீடுகளும் செய்து வருகின்றது. குறிப்பாக முதியோர்களுக்கு இந்தியாவில் இருக்கின்ற சமூக சேவை நிறுவனத்தின் கருத்தைப்பற்றி ஒரு வழிகாட்டி, குறிப்புநூல் வெளியிடப்பட்டுள்ளது.

**7. முதியோர் தொடர்பு சேவை**

முதியோர் நலத்தின் முக்கிய குறிக்கோள், முதியோர்களின் நல்வாழ்விற்கு சேவை செய்வதே. எந்த முதியோர்களுக்குப் பிரச்சினைகள் இருந்தால் அவர்களின் பிரச்சினை மற்றும் தேவைகளை அறிந்து உதவி செய்வதுடன் மற்ற நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கும் சேவை செய்துவருகின்றன.

எனவே மேற் சொன்ன சேவைகளை முதியோர்களின் நல் வாழ்விற்காக, முதியோர் நல மையம் தனது சேவைகளைச் செய்து வருகின்றது. குடும்பத்தில் முதியோர்கள் நன்கு வாழ்ந்தால், அவர்களது குடும்பம் மிக்க மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். முதியோர்களது குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தால் நாடு செழுமையாகும்.

**இந்த தேச வளர்ச்சிக்கு நம்து முதியோர்களின் பங்கும் உண்டு என்பதை அறிந்து அவர்களது வாழ்வை வள**

# பார்த்தோம் படித்தோம்

இந்துமதி எழுதிய 'அவன் கண்ட கனவு' என்னும் சிறுகதை என்னை மிகவும் கவர்ந்தது.

—கே. கனகமணி
அபிராமம்.

'நோய் தீர்க்கும் வெற்றிலை' என்னும் கட்டுரை, வெற்றிலையின் நன்மை பயக்கும் தன்மைகளையும், மருத்துவ முறைகளையும் தெளிவாகக் கூறுகிறது.

—டி.ஏ.பவானிசங்கர்,
தட்சக்காடு.

சிறுகதைகள், மாணவ மாணவியரின் எழுத்தோவியங்கள், அரசின் பணிகள் பற்றிய கட்டுரைகள் — படித்து பாதுகாக்க வேண்டியவையாகும்.

— ஹேமாதாசன்
உடையார்கோவில்.

'ஆனைமலை அற்புதங்கள்' என்னும் கட்டுரை மூலம் சுவையான தகவல்களைத் தெரிந்து கொள்கிறோம்.

—எஸ்.ரவீந்திரன்,
நந்தம்பாக்கம்குடியிருப்பு
சென்னை-89.
ஆர்.பி.அதியமான்.
சென்னை-19.

சத்துணவு பற்றிய கவிதைகள் என் நெஞ்சைக் கவர்ந்தன.

—எஸ்.மின்னல்கொடி,
முத்துப்பேட்டை.

'கோவில் யானை' கட்டுரை நிகழ்ச்சி, நேரில் பார்ப்பது போன்று சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படும் சமயத்தில், இம்மாதிரியான கட்டுரை வெளியிடுவது மிகவும் பொருத்தமாகும்.

— த.சுப்பிரமணியன்,
திருவோணம்.



# பரங்கிமலையில் ஒரு பயனுள்ள கூட்டுறவு

பரங்கிமலை ஊராட்சி ஒன்றியப்பகுதி மண்வளச் செழிப்பு மிகுந்தது. இங்குப் பயிரிடப்படும் காய்கறிகளை, இடைத்தரகர்கள் அந்தந்த விவசாயிகளிடம் குறைந்த விலைக்கு வாங்கி, சென்னை நகரில் அதிக விலைக்கு விற்று லாபமடைந்து வந்தனர். இந்த நிலையை மாற்றி முழு நன்மையும் விவசாயிகளுக்கே கிடைக்கச்செய்ய, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியம், விவசாயப் பெருங்குடி மக்களை ஒன்றுபடுத்திக் காய்கறி, கனி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைத்துள்ளது.

இந்த நல்லியக்கம், உற்பத்தியாளர்களிடமிருந்து காய்கறி, கனி வகைகளை நியாயமான விலைக்குப் பெற்றுக் கூட்டுறவு அங்காடிகள், விற்பனை நிலையங்கள் மூலமாகத் தரமான, சத்துள்ள காய், கனி, கீரை வகைகள் பொதுமக்களுக்கு மலிவான விலையில் கிடைக்க வழி செய்கிறது.

காய்கறி பயிரிடுவதில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு நவீன விவசாய முறைகளில் பயிற்சி அளிப்பதுடன், தரமான விதை, உரம், பூச்சி மருந்து ஆகியவற்றுடன் கடனுதவியும் வழங்கப்படுகிறது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை நல்ல விலைக்கு விற்பனை செய்து தரும் பொறுப்பினையும் இச்சங்கம் மேற்கொண்டுள்ளது. அதிக அளவில் உற்பத்தியாகும் பொருள்களைப் பதப்படுத்தி, நீண்ட நாள் கெடாமல் பாதுகாத்து, நல்ல சுகாதாரமான முறையில் மக்களுக்குக் கிடைக்கவும், அதன் மூலம் பல ஏழைகள் தொழில்நுட்ப அறிவோடு உற்பத்தி செய்யவும் சங்கம் ஏற்பாடு செய்கிறது. அரசு உணவு நிறுவனங்கள், பெரிய உணவு விடுதிகள், மருத்துவ மனைகள் இவைகளுக்குக் காய்கறி, கனிகள் வினியோகிக்கப்படுகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 350 விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர்.

கனி வகைகளைப் பதப்படுத்துதல், கனிச்சாறு தயாரித்தல் ஆகிய பணிகளையும் இச்சங்கம் மேற்கொண்டுள்ளது. இதற்காக இச்சங்கம் 45 மகளிர்களைத் தேர்ந்தெடுத்து அடையாற்றில் உள்ள சமையற்கலைத் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்றுவித்துள்ளது. தமிழக அரசும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட வாயிலாக மைய அரசும் இக்கூட்டுறவு அமைப்புக்கு உதவுகின்றன.

தமிழகத்திலேயே முதன்முறையாக, பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தின் வாயிலாக ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கத்தின் குறிக்கோள்களையும், சாதனைகளையும் கருத்தில் கொண்டு அரசு மற்றும் ஊராட்சி ஒன்றியங்களையும் இது போன்ற அமைப்பை ஏற்படுத்தும்படி கருத்து தெரிவித்துள்ளது.

**இரா. வெங்கடசுப்பிரமணியம்**



# குழந்தைகள் நல மருத்துவம் - ஆராய்ச்சி நிலையம்

பி. எல். ராஜேந்திரன்

'பெறுமவற்றுள் யாமறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற'
— என்றார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

எந்தப் பேறு பெற்றிருந்தாலும் சரி; அறிவு நலம் வாய்ந்த மக்கட்பேறு இல்லையேல் அந்தப் பேறெல்லாம் செல்லாக் காசாகி விடும் என்பது இதன்மூலம் விளங்கும்.

'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பது இதனால்தான்.

'குழந்தைகள் நலன், நாட்டில் மிக முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்; ஏனென்றால், புதிய இந்தியாவை உருவாக்கக்கூடிய நாளைய குடிமக்கள் அவர்களே' என்றார் பண்டித நேரு அவர்கள்.

இதற்கெல்லாம் மதிப்பளிக்கும் விதத்தில், நாட்டுக் குழந்தைகளின் நலம் காக்கப் பல்வேறு ஏற்பாடுகளைப் பயன்மிகு விதத்தில் செய்துவருகிறது தமிழக அரசு. நாடெங்குமுள்ள குழந்தைகள் மருத்துவமனைகள் நன்முறையில் ஊக்குவிக்கப்பட்டு வருவதே இதற்குச் சான்றாகும்.

**கவனமான கண்காணிப்பு**

தமிழ் நிலத்தின் தலைநகராம் சென்னை மாநகரில், எழும்பூர் பகுதியில் உள்ள 'குழந்தைகள் நல ஆராய்ச்சிக் கழகம் -மருத்







துவமனை, இவ்வகையில் ஆற்றிவரும் அரிய பணிகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

இந்தியாவில் உள்ள குழந்தைகள் மருத்துவமனைகளிலேயே மிகப்பெரிய மருத்துவ மனையாகும் இது. பிறந்த குழந்தைகளிலிருந்து பன்னிரண்டு வயது வரையிலான குழந்தைகளின் நலன் இங்கே நல்லபடி கண்காணிக்கப் படுகிறது.

சென்னையிலுள்ள அரசு பொது மருத்துவமனையோடு இணைந்து தனிப் பிரிவாக இயங்கிவந்த இது, 1968 டிசம்பர் 15 முதல் தான் தனி மருத்துவமனையாகவே எழும்பூரில் புதுக் கட்டடத்தில் இயங்கத் தொடங்கியது.

250 படுக்கைகளோடு உருவான இந்த மருத்துவமனைக்கு, இப்போது மேலும் 250 படுக்கை வரை விரிவாக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

''இப்போது கூட, இருப்பது 250 படுக்கையே ஆனாலும் தவிர்க்கமுடியாத நோய் வேகத்தோடு வருகிற குழந்தைச் செல்வங்களின் உயிர்ப் பாதுகாப்பு கருதி 300 வரை இங்கே உள்ளிருப்பு நோயாளிகள் அனுமதிக்கும் படி ஆகிவிடுகிறது.'' என்றார் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய மருத்துவமனை இயக்குநர் டாக்டர் திரு. திருஞானசம்பந்தம்.

24 மணி நேரமும் இந்த மருத்துவமனையில் வேலை நேரமே! அவசரச் சிகிச்சைப் பிரிவு ஒன்றும் இங்குண்டு.

**பிற மாநிலங்களிலிருந்தும்...**

மூக்கடைப்பு ஊசி, போலியோ சொட்டு மருந்து என்பதிலிருந்து எல்லா வகைக் குழந்தைகள் நலன் காக்கும் பணிகள் அனைத்தும் இங்கே சிறப்புறச் செய்யப்படுகின்றன. தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களிலே இருந்து மட்டுமல்ல; இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் இங்கே மருத்துவம் பெறக் குழந்தைகள் கொண்டுவரப்படுகின்றன.

30 டாக்டர்கள் பணியாற்றிடும் புற நோயாளிகள் பிரிவில் மட்டும் நாளொன்றுக்கு ஏறத்தாழ மூவாயிரம் குழந்தைகள் வந்து போகின்றன.

தொற்றுநோய்க்கு ஆளான குழந்தைச் செல்வங்கள் தனிவார்டில் வைத்துக் கண்காணிக்கப்படுகின்றன.

நிறை மாதத்தில் பிறந்த குழந்தைகள் மட்டுமல்ல; குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள் சரியான வளர்ச்சி பெறவும் வகை செய்கிறார்கள் இங்கே.

சில குழந்தைகளுக்குப் பிறக்கும் போதே மஞ்சள் காமாலை நோய் கண்டு, இருக்குமோ இறக்குமோ என்ற அச்சத்தைப் பெற்றோருக்கு உண்டாக்கி விடுவதுண்டு. அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு உடலிலுள்ள இரத்தம் முழுவதையும் அகற்றிவிட்டுப் புது இரத்தம் செலுத்தி உயிரூட்டும் உயரிய பணி.....

விரல்கள் ஒட்டியோ, உணவுக் குழல் அல்லது மலக்குழாய் போன்றவை அடைபட்டோ பிறக்கும் குழந்தைகளை அறுவைச் சிகிச்சை மூலம் சரிப்படுத்தும் சீரிய பணி...

பிறக்கும்போதே தாயை இழந்துவிடும் தளிர்களுக்குத் தக்க பராமரிப்பு அளித்துக் காக்கும் பணி எல்லாமே இந்த மருத்துவ மனையில் நல்லமுறையில் நடைபெற்று வருகின்றன.

**எடையைக் கூட்டலாம்**

பிறக்கும் குழந்தைகள் 40 வாரம் கருவிலிருந்து 3 கிலோவாவது எடையோடு பிறக்க வேண்டும் என்பது நியதி. அடிக்கடி பிள்ளைப் பேறு காணும் தாய்மார்கள் பெற்றெடுக்கும் குழந்தைகளுக்குச் சில நேரங்களில்





இந்த எடை இருப்பது அரிதாகிவிடும். அப்படிப்பட்ட குழந்தைகளைத் தனிப்பிரிவில் வைத்து ( Premature Unit ) தக்கபடி பராமரித்து, பதினைந்தே நாட்களில் உரிய எடை உடையதாக்கப்பட்டுவிடும் அதிசயமும் இந்த மருத்துவமனையில் நடக்கிறது.

'குழந்தைகள் வளர்ச்சிக் கலை விளக்க நிலையம்' என்ற ஒன்று இங்கே செயல்பட்டு வருகிறது. இந்தப் பகுதி தனிக் கட்டடத்தில் 1980 முதல் இயங்கிவருகின்றது.

**சத்தான உணவுகள்**

பொதுவாக எல்லா மருத்துவமனைகளிலும் வரும் நோயாளிகளுக்குச் சிகிச்சை மட்டும்தான் கொடுத்தனுப்புவர். ஆனால் இந்த மருத்துவமனையில் சிகிச்சை அளிப்பதோடல்லாமல், குழந்தைகளை எவ்வாறு ஆரோக்கியமாக வளர்க்கவேண்டும், நோய்கள் வராமல் எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை போதனை மூலமாகவும், செயல்விளக்க மூலமாகவும் இங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள். குழந்தை பிறந்தது முதற்கொண்டு நோய் வராமல் பாதுகாக்கத் தடுப்பு ஊசி என்னென்ன போட வேண்டும் என்று கற்பிக்கிறார்கள். தடுப்பு ஊசியும் போடுகிறார்கள்.

இந்தப்பகுதியைக்கண்காட்சிபகுதிபோல அமைத்துள்ளனர். இங்கு தாய்மார்களும் தங்கள் குழந்தைகளும் எப்படி நலமுற வாழ வேண்டும், குழந்தைகளுக்கு என்னென்ன தடுப்பு ஊசி போட வேண்டும், சுற்றுப்புறச் சுகாதாரம் எப்படி இருக்க வேண்டும், தாய்மார்கள் கர்ப்பகாலத்தில் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பன போன்ற வண்ணப் படங்கள் பாமர மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் அளவில் அமைக்கப்பட்டுள்ளன. படக்காட்சியும் பயன்படுத்தப்படுகிறது

இந்தப் பகுதியின் நோக்கம் மருத்துவமனைக்குவரும் எல்லா தாய்மார்களுக்கும் நாள்தோறும் நலபோதனை நல்குவதாகும்.

குழந்தைகள், நோஞ்சான் குழந்தைகள், எடைக் குறைவான குழந்தைகள் இங்கு வந்தவுடன் முதலில் அந்தக் குழந்தையை ஆராய்கிறார்கள்; நீர், மலம், இரத்தப் பரிசோதனை இவைகளைச் செய்கிறார்கள். பிறகு அந்தக் குழந்தையின் எடை, உயரம், இவைகளை எடுத்துப் பதிவு செய்துகொண்டு குறைந்த செலவில் அதிகமான சத்துள்ள உணவு எப்படிக் கொடுப்பது என்பதைச் சொல்லித் தருகிறார்கள். மேலும் அவ்வகை உணவு தயாரிப்பதைச் செய்தும் காட்டுகிறார்கள். மறுபடியும் இரண்டு வாரத்திற்கு



ஒரு முறை அந்தக் குழந்தையின் எடையை எடுத்துப் பார்க்கிறார்கள். கற்பித்தபடி அவர்கள் செய்திருந்தால் கண்டிப்பாக எடை கூடி இருக்கும். பெரும்பாலான குழந்தைகள் இங்கு வந்து நல்ல பயனை அடைகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**பயனுறப் பணிபுரிவோர்**

மேலும் சமுதாய நலப் பயிற்சிப் பணியாளர்கள், சமூக நலப் பயிற்சியாளர்கள், தேசிய சமூக நலப் பயிற்சி பெறும் கல்லூரி மாணவ மாணவிகள், தனியார் மன்றங்களில் உள்ள தாய்மார்கள், பள்ளி மாணவ மாணவிகள், செவிலியர், பயிற்சியாளர்கள், மருத்துவப் பயிற்சியாளர்கள் யாவரும் இந்தப் பகுதியில் பங்கேற்றுப் பணியாற்றி வருகிறார்கள்.

குழந்தைகள் ஆராய்ச்சி நிலைய மருத்துவமனை டாக்டர்கள் மூவர் இந்தப்பிரிவில் பணியாற்றுகிறார்கள்.

இந்த மருத்துவ மனையில் - சேர்க்கப்படும் குழந்தைகளின் நோய் விவரம் சிகிச்சை அளிக்கப்பட்ட முறை, அக்குழந்தையின் பெற்றோர்; ஊர் முதலான விவரங்கள் ஆகியவை இங்கே தனிப்படப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. எத்தனை ஆண்டுக்குப் பிறகானாலும் சரி, ஒரு குழந்தையைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டுமானால்—அவசியமான பட்சத்தில் முறைப்படி இயக்குநரை அணுகி அக்குழந்தை பற்றிய விவரங்களை ( Records ) நாம் பார்வையிட முடியும்.

''நிறைமாதக் கர்ப்பிணிக்கு, எப்போதுமுள்ள எடையிலிருந்து பத்து முதல் பன்னிரண்டு கிலோ வரை எடை கூடினால் பிரசவம் சுகப்பிரசவமாக இருக்கும். டாக்டர்கள், ஏ.என்.எம்., ஹெல்த் விசிட்டர், தாய் எனப்படும் கிராமப்புற மருத்துவப் பெண்மணிகள் போன்ற தாய்மார்கள் பிரசவம் பார்க்க வேண்டும். பிறந்த குழந்தைக்கு நாலுமாதம் வரையோ, ஆறுமாதம் வரையோ அவசியம் தாய்ப்பால் கொடுத்தே ஆகவேண்டும். இதெல்லாம் சரியாக இருக்கும்பட்சத்தில் குழந்தைகள் நலமுற வளரும்'' என்று கூறும் குழந்தைகள் நல ஆராய்ச்சி நிலைய மருத்துவமனை இயக்குநர் திரு. திருஞான சம்பந்தம்—''ஊனமாகவே பிள்ளைகள் பிறப்பது எப்படி?'' என்ற நம் கேள்விக்கு இப்படிப் பதிலளித்தார். ''கருப்பை சரியின்மை, தாய்க்குப் பெரியம்மை, டி. பி. போன்ற கடுமையான நோய் காணல், பால்வினை நோய்க்கு ஆட்படல் ஆகியவற்றால் பிறக்கும் குழந்தைக்கு ஊனம் ஏற்படும். இது பரம்பரையாகக் கூட வருவதுண்டு.''



பத்து வார்டுகள் இருக்கும் இந்த மருத்துவமனையில் உள்ள பல்வேறு பிரிவுகளுக்குமாகத் தலைமை மருத்துவர்கள் மட்டும் 15 பேர் இருக்கிறார்கள்.

**வெளியிட முகாம்கள்**

இங்குள்ள மருத்துவர்கள் வெளியிடங்களில் போய் மருத்துவ முகாம்கள் நடத்துகிறார்கள். 'Voluntary Agency' களுடனும் அரிமா சங்கம் போன்றவற்றோடும் குழந்தைகள் நல மருத்துவத்தில் இவர்கள் ஒத்துழைக்கிறார்கள்.

ஆண்டொன்றுக்குச் சுமார் 30,000 குழந்தைகள் இங்கே சேர்க்கப்படுகிறார்கள் என்றால், அவர்களில் ஐயாயிரம், ஆறாயிரம் பேர்களுக்கு பேதி, வயிற்றுப் போக்குக் கண்டிருக்கும். இதைத் தடுத்து அவர்களைக் காக்க 'ORT cell' என்ற பிரிவு ஒன்று இங்கே உள்ளது.



காது மூக்கு தொண்டை கவனிப்பு, முடநீக்கியல், பல் வியாதி, எக்ஸ்ரே என எல்லாவற்றுக்குமே இங்கு தனித்தனிப் பிரிவுகள் இருக்கின்றன. க்ஷயம், மார்பு நோய் போன்றவற்றைக் கவனிக்க 25 தனி மருத்துவப் பிரிவுகள் (Special Clinic ) இங்குண்டு.

மத்திய அரசு உதவியோடு, மாநில அரசு செயல்படுத்தி வரும் 'ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்' இந்த மருத்துவமனை அரவணைப்புடனேயே சென்னை மாநகரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இளஞ்சிறார்களைப் பற்றிப் பாட வந்த புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள்—'இன்று குழந்தைகள் நீங்கள், இனி இந்த நாட்டினை ஆளப் பிறந்தீர்' என்று பாடினார். அந்தச் சொற்களின் நேர்த்தி உணர்ந்து அரசு ஆற்றிவரும் குழந்தைகள் நலப்பணி மேம்பட அரசோடு பொதுமக்களும் சேர்ந்து ஒத்து



# சத்தியமங்கலத்தில் சந்தனமரக் கிடங்கு

அந்த 'மினி' லாரி மின்னல் வேகத்தில் பறந்து கொண்டிருந்தது !

'சந்தன மரங்களைக் கடத்திக் கொண்டு ஒருலாரி காட்டு வழியே வந்துகொண்டிருக்கிறது.........' என்ற தகவல் கிடைத்ததுதான் தாமதம், வனத்துறையினர் விரைந்தனர்.

உடனே, லாரி வருகிற வழியாகப் பார்த்து, சாலையின் குறுக்கே இரண்டு கட்டை வண்டிகளை நிறுத்தினர். அதோடு இரண்டுமரங்களையும் போட்டுக் கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

எதிர்பார்த்தபடி, அந்த வழியாக அந்த 'மினி' லாரி படுவேகத்தில் வந்துகொண்டிருந்தது. எவ்வளவு எச்சரித்தும் அது நிற்கவில்லை. இரண்டு கட்டை வண்டிகளையும் தகர்த்தெறிந்துவிட்டு மேலும் செல்லப் பார்த்தது. ஆனால், மரங்களில் ஒன்று லாரியின் உட்பகுதியைத் தாக்கி உடைத்துவிட்டது. அதனால் லாரியின் வேகம் தடைப்பட்டது. உடனே அதிலிருந்த நால்வர் தப்பியோட முயன்றனர். அவர்

ஒருவர் மட்டும் தப்பிவிட்டார்; 'மினி' லாரியும், அதிலிருந்த சந்தனக் கட்டைகளும் கைப்பற்றப்பட்டன.

அண்மையில் நடந்த இந்தச் சந்தனக் கட்டைகள் கடத்தல் சம்பவத்தைப் பற்றி நாம் தெரிந்து கொள்வது, பெரியார் மாவட்டத்திலுள்ள சத்திய மங்கலம் சந்தன மரக்கிடங்கில்!

**இயற்கை தந்த அருட்கொடை!**

சென்னையிலிருந்து சென்ற செய்தியாளர்கள் கிடங்கைப் பார்க்கச் சென்றிருந்தபோது, மேலும் பல சுவையான தகவல்களும் கிடைத்தன.

கிடங்குக்குள் நுழைகிறோம். கமகமவெனச் சந்தன மணம் கமழ்கிறது. அதோ! ஓரிடத்தில் சந்தனமரக் கட்டைகள்-பட்டைகள் குவியல் குவியலாய்த் தென்படுகின்றனவே!

காட்டில் பட்டுப்போய்க் கீழே விழுந்த ஒரு சந்தனமரத்தைக் கூட அப்படியே அங்குப் போட்டு வைத்திருக்கிறார்களே! செய்தியாளர்கள் அதைச் சூழ்ந்து கொண்டு பார்க்கிறார்கள்.

சந்தனமரம் ஒன்று முதிர்ந்து தானாகப் பட்டுவிட்ட பின்னர், அதன் வேர்ப் பகுதி உட்பட எடுக்கப்படும் சந்தனமரத்தால், வேர்ப்பகுதி மணம் மிகுந்ததாகவும், அதிக விலை பெற்றுத்தரக் கூடியதாகவும் கருதப்படுகிறது என்ற தகவல்களை மாவட்ட வன அலுவலர் திரு என். இராமச்சந்திரன் அவர்கள் சொல்லத் தெரிந்து கொள்கிறோம்.

**ஒரு சந்தன மரத்தின் ஆயுள் எவ்வளவு?**

சந்தனமரங்கள் 50 முதல் 60 ஆண்டுகள் வரை வாழக் கூடியவை. பெரும்பாலும் தமிழகக் காடுகளில் உள்ள சந்தனமரச் செல்வங்கள் அனைத்தும் நமக்கு இயற்கை தந்த அருட்கொடையாகும்.

**சத்தியமங்கல சந்தனக் கிடங்கு**

சந்தன மரம் காடுகளில் இருந்தாலும் சரி, தனியார் நிலங்களில் இருந்தாலும் சரி அவை அனைத்



சந்தன மரமொன்றைச் செய்தியாளர்கள் பார்வையிடுகிறார்கள்.

தமிழகச் சந்தனமரக் கிடங்குகளில் ஒன்றான சத்தியமங்கலக் கிடங்கு 1919-ல் அமைக்கப்பட்டது. கடந்த 63 ஆண்டுகளாக இயங்கி வரும் இந்தக் கிடங்கில் பல உயர்தர சந்தன மரக் கட்டைகள் சேகரிக்கப்படுகின்றன. பிறகு அவை துண்டுகளாகவும், சக்கைகளாகவும், தூளாகவும் தயாரிக்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் சேலம், திருப்பத்தூர், சத்தியமங்கலம் ஆகிய 3 இடங்களில் சந்தன மரக் கிடங்குகள் உள்ளன.

சந்தன மரங்கள் நமக்குப் பல வகையிலும் பயன்படுகின்றன.

சந்தன மரத்தில் அழகிய வேலைப்பாடு மிக்க கைவினைப் பொருட்கள், மணங்கமழும் சந்தனப் பொடி, சந்தனத்தைலம் அரைத்த சந்தனம் எல்லாம் மங்கல விழாக்களில் மணக்கின்றன அல்லவா? 'அரைக்கினும் சந்தனம் தன் மணம் அறாது' என்ற முதுமொழி இதன் பெருமையை உணர்த்துகின்றதன்றோ? பட்டு வேட்டியும், பட்டுச் சட்டையும் போட்டு கொஞ்சம் சந்தனத்தையும் வைத்துப் பாருங்கள், அதன் மகிமையே மகிமை! சந்தனம் வேனல் கட்டி போன்றவற்றுக்கு மருந்தாகவும் பயன்படுகிறது. சந்தனமரத்தின் அடி முதல் நுனி வரை வீணாகாமல் பெரிதும் பயன்படுவதால் அதன் பெருமை பலராலும் பேசப்படுகின்றது.

## இரட்டைப் பூட்டு!

'ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்! என்பார்கள். அதைப் போல, 'ஏலம் விடும் மரத்துக்கு இரட்டைப் பூட்டு!' என்று இங்கு அழைக்கிறார்கள். அதாவது ஒற்றைப் பூட்டு பூட்டப்பட்டுள்ள கிடங்கில் (Single lock godown) சுத்தம் செய்யப்படாத சந்தன மரங்கள் வைக்கப்படுகின்றன. இரட்டைப் பூட்டுபூட்டப்பட்டுள்ள கிடங்கில் (Double lock godown) சுத்தம் செய்து தரம் பிரிக்கப் பெற்ற, விற்பனைக்குத் தயார் நிலையிலுள்ள சந்தனக் கட்டைகள் வைக்கப்படுகின்றன.



ணக்குத் தயார் நிலையில் உள்ள சந்தன
ண்டுகள்.

சுத்தமாக்கப்பட்ட, சந்தன மரங்கள் 19 வகைகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகைக்கும் எண் இடப்பட்டு, முத்திரை குத்தப்படுகின்றன.

சந்தன மரத்துக்குப் பல திருநாமங்கள் உண்டு.

விளையாத் புத், சினா புத், பஞ்ஜம், கட்லா, கட்பட்லா, பக்ரதாத், ஜஜ்போக்கல்,செரியா, ஹத்தேரி சில்ட்டா, பசோலா புக்னி-இப்படி இதற்குப் பெயர்கள் உண்டு.

விலை மதிப்புமிக்க சந்தன மரங்களைக் கடத்தும், சமூக விரோதிகள் பயங்கர ஆயுதங்கள் வைத்திருப்பதும் உண்டு. கடத்தல் தடுப்பில் ஈடுபட்டுள்ள வனத்துறையினருக்கு வாகனம் மற்றும் ஆயுத வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டுமென்ற கருத்தை அரசு ஏற்றுக் கூடுதல் வாகனங்களையும் ஆயுதங்களையும் வழங்க உத்தரவிட்டுள்ளது.

இந்தக் கிடங்கில், ஓராண்டில் இருமுறை ஜூலை மற்றும் டிசம்பர் மாதங்களில் ஏலம் விடப்படுகின்றது. கடந்த ஜூலை மாதத்தில் நடந்த ஏலத்தின் மூலம் 100 டன் நல்ல ரக சந்தன மரமும், 80 டன் சாதாரண மணமில்லா சந்தன மரத்துண்டுகளும் விற்கப்பட்டு ரூ. 33 இலட்சம் வருவாய் கிடைத்தது. டிசம்பர் ஏலத்தில் 250 டன் விற்க இயலும் என்று வன அலுவலர்கள் தெரிவித்தனர். ஏலம் எடுக்க இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து வணிகர்கள் வருகிறார்கள். தமிழ்நாட்டுச் சந்தனம் இந்தியாவெங்கும் மணம் பரப்பி நம் ஒருமைப்பாட்டைச் சொல்லாமல் சொல்கிறது. அல்லவா?



# இதன் வயது 125

இந்தியாவிலேயே மிகப்பழமை வாய்ந்த பல்கலைக் கழகங்கள் மூன்றில் ஒன்று சென்னைப் பல்கலைக் கழகமாகும். இலண்டன் பல்கலைக் கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு 1857ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட இப்பல்கலைக் கழகம், 1957ஆம் ஆண்டு நூற்றாண்டு விழாவினைக்கொண்டாடி முடித்து, இந்த ஆண்டில் தனது 125வது ஆண்டு விழாவினைச் சீரும் சிறப்புமுறக் கொண்டாடத் திட்டமிட்டு வருகின்றது. இது தொடர்ந்து நாட்டிற்கு நல்ல அரசியல் அறிஞர்களையும், நிர்வாகத் திறன்மிக்க ஆட்சியாளர்களையும், வழக்கறிஞர்களையும், நீதிபதிகளையும், பல்வேறு நிபுணர்களையும், கல்வியாளர்களையும், பொறியியல் வல்லுநர்களையும், மருத்துவர்களையும், தொழிலதிபர்களையும், தத்துவஞானிகளையும், அறிஞர் பெருமக்களையும் அளித்துள்ளது.

தாய்ப் பல்கலைக் கழகமான சென்னைப் பல்கலைக் கழகம் 1916ஆம் ஆண்டில் மைசூர் பல்கலைக்கழகம், 1918ஆம் ஆண்டில் உஸ்மானியா பல்கலைக் கழகம், 1926ஆம் ஆண்டில் ஆந்திராப்பல்கலைக்கழகம், 1929ஆம் ஆண்டில் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1937ஆம் ஆண்டில் கேரளப் பல்கலைக்கழகம், 1954ஆம் ஆண்டில் ஸ்ரீ வேங்கடேஸ்வரா பல்கலைக்கழகம், 1966ஆம் ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1971ஆம் ஆண்டில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், 1978ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக் கழகம், 1981ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக்கழகம், 1982ஆம் ஆண்டில் பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்கள் தோற்றங் கொண்டுள்ள இடமாயிருந்திருக்கின்றது.

கல்விக்கோயிலாகத் திகழும் இப்பல்கலைக் கழகம் காலந்தோறும் புதிய புதிய துறைகளில் காலத்திற்கேற்பக்கல்விப்பரப்பை விரிவு படுத்தி வருகின்றது. போர்க் கல்வி, கம்ப்யூட்டர் அறிவியல் தொழில் நுணுக்கம், விண்வெளி அறிவியல், நிர்வாகத் துறைப் படிப்பு, முதியோர் தொடர் கல்வி, பத்திரிகை இயற்கல்வி, நூலகவியற் கல்வி, மண்ணியல் அறிவியல், இயற்பியல் அறிவியல், மானுடவியல் முதலான துறைகளில் தன் கல்வி எல்லையை விரித்து வருகின்றது. அடிப்படை மருத்துவ இயல்புப் படிப்பும், தரமணி என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. அஞ்சல் வழிக் கல்வித் துறை தொடங்கப்பெற்ற பி.ஏ., பி.காம்., எம்.ஏ., எம்.காம்., வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன. வேலைவாய்ப்புத் திட்டத்திற்குரிய கல்வியும் கருதப் பெற்று வருகின்றது வணிக, தொழில் துறைகளோடுபல்கலைக் கழகம் தொடர்பு கொண்டு தொழில் நிர்வாகப் படிப்பின் எல்லையினை விரிவாக்கிக் கொண்டு வருகின்றது.

இவ்வாறு கல்வித் துறையில் காலத்திற்கேற்ற மாற்றங்களைச் செய்துவரும் சென்னைப் பல்கலைக் கழகம், தான் விரைவில் கொண்டாடவிருக்கும் 125வது ஆண்டு விழாவினையொட்டிச் சில புதிய துறைகளைத் தொடங்கவிருப்பதோடு, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கும் சில துறைகளை விரிவுபடுத்தவும் திட்டமிட்டுள்ளது.

தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் வகையில் இயங்கும் தமிழ்க் கலைகளுக்கென (பெர்பார்மிங் ஆர்ட்ஸ்) ஒரு துறை தொடங்கப் பெற்று, இதற்கென ஓர் அரங்கமும் அமைக்கப்படவிருக்கிறது. கம்ப்யூட்டர் அறிவியற்கூடம் ஒன்றும் நிறுவப்படஉள்ளது. காந்தியப் படிப்பு, சர்வதேச நல்லுறவு, இந்திய ஜப்பானியப்படிப்பு, சமணவியல், நிர்வாகப் படிப்பு, அறிவியல் காட்சிக் கூடம், நூலகத்தை நவீனப்படுத்துதல், அச்சுக்கூடம் அமைத்தல், பதிப்பகம் ஏற்படுத்தல், கருத்தரங்க அறைகள் அமைத்தல் அடிப்படை மருத்துவ அறிவியல் படிப்பு விரிவாக்கம், இப்போது இயங்கிவரும் துறைகளை மேம்பாடுறச் செய்தல், தேசிய சேவை விளையாட்டுப் பயிற்சிகள், ஊழியர்கள் நலத் திட்டங்கள் முதலியன திட்டமிடப்பட்டுள்ளன.



## ராட்சதத்தவளைகள்

நண்டுகளை விழுங்கும் தவளைகள் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா? நண்டுகள் என்ன? பாம்புகள், பறவைகளையும் விழுங்கியுள்ளன இந்தத் தவளைகள்!

கொங்கன் கிரிஷி வித்யாபீட விஞ்ஞானிகள், சில தவளைகளின் உடலைக் கீறி, சோதனைகள் நடத்தியபோது அவற்றின் வயிற்றில் சிறிய பாம்புகள், பறவைகள் இருந்ததைக் கண்டுபிடித்துள்ளனர்.

வயல்களில் பயிர்களுக்கு ஏற்படும் தொல்லைகளைக் கட்டுப்படுத்துவதில் தவளைகள் எங்ஙனம் உதவுகின்றன என்பதுபற்றி இந்த விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

பூச்சிகளை உட்கொண்டு இந்தத் தவளைகள் பயிர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்றன.

## அழகோவியம்

**ஆசிரியர் :** புலவரேறு அரிமதி தென்னவன்,

**வெளியீடு:** சேகர் பதிப்பகம், பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-600 076.

**பக்கம்:** 126 **விலை:** ரூ. 9-00

இருபத்தேழு தலைப்புகளில் ஓவியத் தமிழ் என்ற பகுதியுடன் தொடக்கம் பெற்று 'துணைகள்' என்னும் பகுதியுடன் முடிவுறும் கவிதைத் தொகுப்பு இந்நூல். அறுசீர், எண்சீர் ஆகிய இரண்டினாலும் அருஞ்சுவையுடன் படைத்திருக்கிறார் கவிஞர்.

கவிதைகள் அனைத்தும் கற்கண்டுகளாக இனிக்கின்றன. படிப்போர்க்குத் திகட்டவே இல்லை. புதுவை மண்ணின் சிறப்போ, புரட்சிப் பூங்குயில் பாவேந்தரிடம் நூலாசிரியர் கொண்டுள்ள பற்றின் காரணமோ பாவேந்தரின் கவிதைகளில் உள்ள ஓட்டமும் அழுத்தமும், சொல்லாட்சியும், இந்நூல் முழுதும் காணப் பெறுகின்றன.

இயற்கையின் வனப்பும், இயற்கைப் பொருள்களும்இவரின் பாடல்களில் ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. குரங்கை வைத்து ஆட்டி கும்பியைக் கழுவுவான் குரங்காட்டி. இவரோ குரங்கைப் பாடு பொருளாக்கி, தங்கக் கம்பி போன்ற தத்துவங்களை வடித்துக் கொடுக்கிறார். காக்கை, கோழி, பூனை, அணில், எருமை ஆகிய அனைத்தும் கவிஞருக்குத் துணையாகி நிற்கின்றன; தூய கவிதையை உருவாக்க வழி வகை செய்கின்றன. 'புதுச்சேரி'யை ஒரு ஓவியமாகவே வடித்துத் தந்து விடுகிறார். கவிஞர் அவரது பிறந்த மண்ணான திண்டிவனம் குறித்தும் சுவையாக எழுதியுள்ளார். எனவே திண்டிவனமும் 'பாடல் பெற்ற ஸ்தலமாகி' விடுகிறது! தலைப்புகளுக்கேற்ற ஓவியங்கள் நூலின் உள்ளே இடம் பெற்று நூலை அழகோவியமாக்கி உள்ளன.

## பாரதி பதியம்

**ஆசிரியர் :** கவிஞர் தமிழ்முடி,

**வெளியீடு:** தமிழ்முடி நிலையம், 1332, செக்டர் 7, தெரு 33. கே. கே. நகர், சென்னை-600 078.

**பக்கம்:** 96 **விலை:** ரூ. 4–50

பாரதி நூற்றாண்டை ஒட்டி அவருக்கு அஞ்சலி செலுத்தும் பாரதியின் இதயத்தைப் பாங்காகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

பாரதியின் மொழிப்பற்று, நாட்டுப் பற்று, புரட்சி மனப்பான்மை, பெண்ணுரிமைபோன்ற கொள்கைகளை எளிய, இனிய நடையில், எல்லாருக்கும் புரியும் விதந்தில் விளக்கியிருப்பது நூலாசிரியரின் திறமைக்கு எடுத்துக் காட்டு ஆகும்.

புறநானூறு, இராமாயணம் போன்ற இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டி, மன்னர்களின் சிறப்பைச் சொல்லும் நூலாசிரியர் - 'அமைச்சர்களை அரசர்கள்தான் நியமிக்கிறார்கள் என்று எடுத்துக் கூறி இன்றைய ஜனநாயக முறைத் தேர்தல்களைச் சுட்டிக் காண்பித்து, அதனால்தான் மக்களை எல்லாம் மன்னர்கள் என பாரதியார் பாடி




யுள்ளார் எனக் குறிப்பிடுவது பாராட்டுக் குரிய விளக்கமாகும்.

## ஒட்டக்கூத்தரின் ஈட்டி எழுபது

**குறிப்புரை:** புலவரேறு பெ. வேலு,

**வெளியீடு:** தமிழ்ச்சங்கம், தாரமங்கலம், சேலம் மாவட்டம்.

**விலை:** ரூ. 5.00 **பக்கம்** 84.

விக்கிரம சோழன், குலோத்துங்க சோழன், இராசராச சோழன் ஆகிய மூன்று மன்னர்கள் குறித்தும் உலா நூல்கள் எழுதிய பெரும் புலவர் ஒட்டக்கூத்தர் செய்த நூல் இது.

செங்குந்தர் என்னும் இனத்தவரின் சிறப்பையும் பழங்காலத்தில் அவர்கள் படைவீரர்களாகத் திகழ்ந்து புகழ்பெற்ற

கிறது. அக்காலத்து வரலாற்றுச் செய்திகளும் புராணக் கதைகளும் நூலில் நிறைந்திருக்கின்றன.

குறிப்புரை இனிய, எளிய நடையில் அமைந்திருப்பது பாராட்டுக்குரியது. சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கும் ஒட்டக்கூத்தர் வரலாறு சுவையாக உள்ளது.

—**தமிழ்ப்பித்தன்**

## அறிவியல் இன்பம்

**ஆசிரியர் :** கு. ராஜாராம்

**வெளியீடு :** மீனாட்சி புத்தக நிலையம், 222, டாக்டர் நடேசன் சாலை, சென்னை-5.

**விலை:** ரூ. 6-00 **பக்கங்கள்:** 123

குழந்தைகளுக்காகப் பல நூல்கள் வெளிவந்தாலும், அறிவியல் நூல்கள் குறைவு என்பதை நாம் உணர வேண்டும்.

'அறிவியல் இன்பம்' என்ற இந்த நூல், நாளைய தலைமுறைகளின் அறிவு வளர்ச்சிக்கு வழி கோலும் என்பதைக் கோடிட்டுக் காட்டலாம். பெரியவர்களுக்கு எப்படியும் எழுதலாம்; புரிந்து கொள்வார்கள். ஆனால், குழந்தைகளுக்கு இப்படித்தான் எழுத வேண்டும் என்ற வரையறை உள்ளது. அப்போதுதான் அதை அவர்கள் புரிந்துகொள்ள முடியும். அதுவும் அறிவியல் கருத்தை எப்படிச் சொல்ல வேண்டுமோ அப்படிச் சொல்லி, அவர்களைத் தம் பக்கம் கவர்ந்திழுக்கிறார் நூலாசிரியர்.

எளிய சொற்கள்: இனிய நடை; எவரும் எளிதில் கிரகித்துக்

—அதில் நகைச் சுவை வேறு— கேட்க வேண்டுமா? படிக்க இனிக் கிறதே!

இந்நூலில் பத்துக் கட்டுரைகள் உள்ளன. சந்திரமண்டலம், கண்ணாடிகள், தார், முத்து, கடல், சூரியன், இரைச்சல் போன்ற கட்டுரைகளில்எத்தனைவிதமான புதிய செய்திகளை நாம் தெரிந்து கொள்கிறோம்!

மாணவர்க்கு மட்டுமல்ல, பெரியவர்க்கும் பயன்தரும் நல்ல நூல் இது.

## மு. வ. முப்பால்

**ஆசிரியர்: டாக்டர் ம.ரா.போ. குருசாமி,**
**விற்பனை உரிமை: முல்லைச் சுற்றம்,**
**எச்-7-2, நான்காவது அவென்யூ, இந்திரா நகர், சென்னை-600020.**
**விலை: ரூ. 12 பக்கங்கள்: 223**

மு.வ. என்ற இரண்டெழுத்துப் பெயர், எல்லார் இதயங்களிலும் என்றும் நிலைத்திருக்கும் திருப்பெயராகும். அவரது படைப்பிலக்கியங்கள் எல்லாமே இனிக்கின்ற கற்கண்டாக, முக்கால முக்கனியாக விளங்குபவை. கதை நாவல், கட்டுரை-இப்படி எதிலும் அவர் சோடை போனதில்லை. தெளிந்த நீரோடை போல் ஒவ்வொன்றையும் ஒழுங்காக ஆக்கித் தந்திருக்கிறார்.

டாக்டர் மு. வ. அவர்களின் படைப்பிலக்கியங்களைப் பலரும் வியந்து போற்றும் வகையிலே, திறம்படத் திறனாய்வு செய்திருக்கிறார் டாக்டர் ம.ரா.போ. குருசாமி அவர்கள்.

நூலாசிரியர், பல்வேறு கருத்தரங்குகளில் ஆற்றிய அரிய சொற்பொழிவுகளின் அழகிய கோவையாகத் திகழும் இவ்வாய்வு நூலில், மு. வ. அவர்களை நேரில் பார்க்கிறோம் - அவர் நம்முடன் பேசுவது போன்றும் உணர்கிறோம்.

டாக்டர் மு.வ. அவர்களை உலகியல் - உளவியல் - ஆன்மிக இயல் என்று மூவகையாகப் பிரித்து 'மு.வ.-முப்பால்' என்று தமிழன்னைக்கே மகுடம் சூட்டி மகிழ்கிறார் நூலாசிரியர்.

திறனாய்வு செய்வோருக்கு மட்டுமல்ல. தீந்தமிழில் ஆர்வமுடைய ஏனையோருக்கும் கூட இந்நூல் ஓர் வரப்பிரசாதமாகும்.

## பொன்மயில் குழந்தைப் பாடல்கள்

**ஆசிரியர் : குன்றக்குடியான்**
**வெளியீடு: குழந்தை இல்லம், 5ஏ, அம்பாள்புரம் முதல் வீதி, செக்காலை, காரைக்குடி-623002.**
**விலை: ரூ. 3.50 பக்கங்கள்: 50**

'காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு' என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க நல்ல கவிதை நூல்கள் பெருகிட வேண்டும். குறிப்பாக, குழந்தைகளுக்கான பாடல்கள், அவர்கள் ஆடிப்பாடி மகிழ்வதற்கேற்ற பாடல்கள் நிறைய வெளிவருதல் வேண்டும். குழந்தை இலக்கியம் வளர்வதற்கு இவையெல்லாம் உறுதுணையாக இருக்கும். இந்த வகையில், திரு குன்றக்குடியான் எழுதிய 'பொன் மயில்-குழந்தைப் பாடல்கள்' விளங்குகின்றன. 27 பாடல்களில் பல பாடல்கள் பெரியவர்கள் மனத்தையும் கவர்கின்றன; பொன் மயிலைப் போல அழகாகவும் இருக்கின்றன.

**பி.வி. கிரி**

## வாழ்நாளை வளர்ப்பது எப்படி ?

**ஆசிரியர் : திரு மு. முத்துக் காளத்தி, எம்.ஏ.**
**வெளியீடு: பாரி நிலையம், 184, பிராட்வே, சென்னை-1.**
**விலை: ரூ.8.25 பக்கங்கள்: 136**

'பிறப்பு' என்றாலே 'இறப்பும் ஒருநாள் வந்தே தீரும்! இது இயற்கையின் நியதி! சாகப்போகிறோம் என்பதற்காக, தினம் தினம் செத்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. மனிதனாகப் பிறந்தவர்கள் அத்தனைப் பேரும் என்றைக்கோ ஒருநாள் மறைவு எய்தத்தான் போகிறார்கள். மனிதன் நோய் நொடி இன்றி வாழ வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

நோய் வருவதற்கு முன்னரே நோய் வராதபடி நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நோய் வந்த பின் கண்ணீர் சிந்தி பலன் இல்லை.

திரு மு. முத்துக்காளத்தி எழுதிய ''வாழ்நாளை வளர்ப்பது எப்படி?'' என்ற நூலைப் படித்தால் அது, நோயற்று மனிதன் எப்படி வாழமுடியும் என்பதை உணர்த்தும் நூலாக விளங்குகிறது. மருத்துவ முறையில் துணிச்சலான முயற்சியை ஆசிரியர் மேற்கொண்டிருக்கிறார். அவரது முயற்சி வீண்போகவில்லை. இந்த நூலைப் படித்தாலே போதும். நம் பக்கம்



### 12 ஆண்டுகளில் 57 ஆராய்ச்சி நூல்கள்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது பேரறிஞர் அண்ணா அவர்களால் அமைக்கப்பட்ட 'உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்' கடந்த 12 ஆண்டுகளில் 57 சிறந்த ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளது. இந்நிறுவனத்தின் நூல்கள் ஆண்டொன்றுக்கு 2 இலட்ச ரூபாய்க்கு விற்பனையாகின்றன.

எந்த நோயும் நிச்சயம் அண்டப் பயப்படும் என்று கூறலாம். அந்த அளவுக்கு நோயையும் சொல்லி, அதை எப்படித் தவிர்ப்பது என்பதையும் கூறி, தெளிவு படுத்தியிருக்கிறார் நூலாசிரியர்.

**ஜி. ஆனந்தன்**

## சுவையான பலகாரங்கள் தயாரிப்பது எப்படி ?

**ஆசிரியர் : செல்வி**
**வெளியீடு: இலக்குமி நிலையம் 10, காசிம் சாகிப் தெரு, இராயப்பேட்டை சென்னை-600 014.**

எவ்வளவுதான் செலவு செய்து பண்டம், பலகாரம் செய்தாலும், அவை வாய்க்கு ருசியாக இருக்க வேண்டுவது மிகவும் முக்கியம் அல்லவா?

படித்த பெண்களுக்குப் பலகாரங்கள் செய்வது என்பது சற்றுக் கடினமான காரியம்தான் என்றாலும், பழகப் பழக எல்லாம் கைவந்த கலையாக மாறி விடும் எனலாம். சிறு வயதுமுதற்கொண்டே தாயுடன் சமையல் கலையைக் கற்றுக் கொள்பவர்களுக்கு இந்தக் கவலை இல்லை.

பலகாரங்கள் தயாரிப்பது-அதுவும் சுவையான பலகாரங்கள் தயாரிப்பது எப்படி? என்ற இந்த நூல், பொதுவாகப் பெண்மணிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் என்று துணிந்து சொல்லலாம்.

—மருது

# பாரதி விழா







படத் தொகுப்பு!

(டி 17-12-1982 — சென்னை)



## விழாவில் திறந்து வைக்கப்பெற்ற மாதர் திலகங்களின் உருவப்படங்கள்

மகளிரைப் போற்றிய பாரதியின் நினைவாக, பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் பதினோரு பெண்மணிகளின் உருவப்படங்கள் திறந்து வைக்கப்பெற்றன. இந்திய நாட்டில் தலைமைப் பதவிகள் வகித்த அந்தப் பெண்மணிகளின் படத்தை மைய அரசின் மாண்புமிகு கல்வி அமைச்சர் திருமதி ஷீலா கௌல் திறந்துவைத்தார். படங்களில் இடம் பெற்ற மாதர் திலகங்கள் விவரம்:

தில்லையாடி வள்ளியம்மை

நாகம்மையார்

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி

சரோஜினி நாயுடு

ராஜகுமாரி அமிர்த கௌர்

டாக்டர் தர்மாம்பாள்

துர்காபாய் தேஷ்முக்

கமலாதேவி சட்டோபாத்யாயா

சுசேதா கிருபளானி

கிளப்வாலா ஜாதவ்

வை. மு. கோதைநாயகி

## திறந்து வைக்கப்பெற்ற வேறு படங்கள்

மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவப்படத்தை திருமதி சத்தியவாணிமுத்து எம்.பி. திறந்து வைத்தார்.

பாரதியார் விழாவையொட்டி நிறைவேற்றப்பட்ட திட்டங்களை விளக்கும் தமிழ்நாடு படத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் நாவலர் திறந்து வைத்தார்.



திருமதி சத்தியவாணிமுத்து, எம். பி. பாரதி படத்தைத் திறந்து வைத்தார்.

●

திருமதி மரகதம் சந்திரசேகர், எம்.பி. பாரதி கணகாட்சியைத் திறந்து வைத்தார்.





மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற பட்டி மன்ற நிகழ்ச்சி.





பல்வேறு மாநிலத்தவர்கள் நடத்திய கலை நிகழ்ச்சி







மேதகு தமிழக ஆளுநர்,



மேதகு பீகார் ஆளுநர்,





மாண்புமிகு இந்திய அமைச்சர்களுக்கு
மாண்புமிகு முதல்வர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்குதல்.







நெடுங்காலமாகப் பாரதியின் பெருமையைத் தமிழகத்தில் எடுத்துச் சொல்லி வந்த பல்வேறு துறையினர், மாண்புமிகு முதல்வர் அவர்களால் பாராட்டுப்பெற்றனர்.

சிலம்புச் செல்வர் திரு. ம.பொ.சி.
திரு சுத்தானந்த பாரதியார்
திரு பெ.தூரன்
திரு சோமயாஜுலு
திரு பெ. நா. அப்புசாமி
திரு ஏ.கே.செட்டியார்
திரு அ.வெ.ரா.கிருஷ்ணசாமி ரெட்டியார்
திரு ஆர்யா
திரு கவிஞர் ஆறுமுகனார்.
திரு நாரண துரைக்கண்ணன்
திரு எஸ்.வி.சகஸ்ரநாமம்
திரு நா.மகாலிங்கம்
ஏவி.எம். நிறுவனத்தார்
திரு ரா. அ. பத்மநாபன்
திருமதி டி.கே.பட்டம்மாள்
திரு டி.என். இராமச்சந்திரன்
திரு சீனி விசுவநாதன்

## பாரதி புகழ் பரப்பிப் பாராட்டுப் பெற்றவர்கள்









பாரதியின் குடும்பத்தவரை மாண்புமிகு முதல்வர் பாராட்டுதல்.






இசை நிகழ்ச்சிகள்







நாட்டிய நிகழ்ச்சிகள்

# புது வரலாறு படைத்த மகளிர் பேரணி

பாரதியாரின் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி சென்னையில் நடைபெற்ற ''மகளிர் பேரணி'' புதிய வரலாற்றைப் படைத்துவிட்டது!

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியில் பிரம்மாண்டமான முறையில் அமைக்கப்பட்டிருந்த அலங்கார மேடையில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ஆர். அவர்கள் 'மகளிர் பேரணி' யைக் கண்டு களித்தார்கள்.

பாரதியார் நூற்றாண்டு நிறைவு விழாவையொட்டி 16.12.82 அன்று மாலை 4 மணி அளவில் சென்னை எழும்பூர் இராசரத்தினம் விளையாட்டு அரங்கிலிருந்து 'மகளிர் பேரணி' புறப்பட்டது. முழுக்க முழுக்க மகளிரே பங்குபெற்ற இந்தப் பேரணி பென்னிசாலை, பிறகு அண்ணாசாலை, நுங்கம்பாக்கம், கோடம்பாக்கம் ஆகிய நெடுஞ் சாலைகள் வழியாக ''வள்ளுவர் கோட்டத்''திற்கு மாலை வந்தடைந்தது. மகளிர் பேரணி சென்ற பாதைகளின் இருபுறங்களிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் 'மகளிர் பேரணியின் எழுச்சியைக் கண்டு வியப்புற்றனர்.

ஆடவர்களுக்கு நாங்கள் எந்த வகையில் சளைத்தவர்கள்? என்று கேள்வி கேட்பது போன்ற உணர்ச்சியும் எழுச்சியும் மகளிர் பேரணியில் இருந்ததைக் காண முடிந்தது.

**இசை முழக்கம்!**

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி கோமதி சீனிவாசன் அவர்கள், சத்துணவுத் திட்ட உயர் மட்டக் குழு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா, குடிசை மாற்று வாரியத் தலைவர் திருமதி சுலோசனா சம்பத், கோழி அபிவிருத்திக் கழகத் தலைவர் திருமதி கல்யாணி ராமசாமி ஆகியோர் பேரணியில் முன்நின்று வர, மகளிர் அணி தொடர்ந்தது.

அதைத் தொடர்ந்து பாரதியார் சிலை அமைக்கப்பட்ட அலங்கார ஊர்தியில் மகளிர் நாதசுரக் குழுவினர் நாதஸ்வர இசை முழங்கி வந்தனர். இதனைத் தொடர்ந்து டெல்லியில் ஆசிய விளையாட்டுப் போட்டியில் நடைபெற்ற கலைஞர்களின் கரக ஆட்டம், காவடி ஆட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம் ஆகியவை இடம் பெற்றிருந்தன, பிறகு, ''இந்திய அரசுப் பணி, காவல் பணி'' என்ற பதாகை ஏந்தியவாறு, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி கரியாலி, சமூக நலத்துறை இயக்குநர் திருமதி யாஸ்மின் அகமது ஆகியோர் சென்றனர். அவர்களைத் தொடர்ந்து மாவட்டத்திலுள்ள மகளிர் ஆட்சித் தலைவர்கள் மாநிலம் முழுவதிலும் பல்வேறு துறைகளில் பணிபுரியும் ''ஐ.ஏ.எஸ்..'' ''ஐ.பி.எஸ்'' அலுவலர்கள் சென்றனர்.

அலங்கார வண்டியில் பாரதியாரின் பேத்தி திருமதி லலிதா பாரதி, உழைக்கும் மகளிர் சங்கத் தலைவர் திருமதி ஜெயா அருணாசலம், சமூலநலத்துறை தலைவி சரோஜினி வரதப்பன், திருமதி அலமேலு அப்பாத்துரை ஆகியோர் தலைமையில் பெண்கள் அணி வகுத்து வந்தனர்.

**எம்மதமும் சம்மதம்**

சென்னையிலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவிகள் - அனைத்து மேல்நிலைப் பள்ளி மாணவியர்கள் தங்கள் கரங்களில் மகளிர் பெருமைகளை உணர்த்தும் பாரதியாரின் பாடல்களில் குறிப்பிட்டுள்ள வாசகங்களை ஏந்தி வந்தனர். இடையிடையே ''பாரதி வாழ்க!'' என்ற வாழ்த்து முழக்கங்களையும் முழங்கினர்.






தமிழக மகளிர் பிரிவினைச் சேர்ந்தவர்கள் மட்டுமன்றி, பஞ்சாப், குஜராத், உத்திரப்பிரதேசம், ராஜஸ்தான், கேரளா ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த மகளிர் பிரதிநிதிகள் அணிவகுத்து வந்த காட்சி கண்கொள்ளாக் காட்சியாகவும் தேசிய ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதாகவும் இருந்தது.

தமிழக அரசு தலைமைச் செயலக மகளிர், மருத்துவர்கள், செவிலியர்கள், தொழிற்பயிற்சி கல்லூரியைச் சேர்ந்தவர்கள், கல்லூரி - பள்ளிப்பேராசிரியர்கள், ஆசிரியர்கள், சென்னை மாநகராட்சி மகளிர் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள், சமூக நலத்துறையைச் சேர்ந்த மகளிர், என்.சி.சி. மாணவிகள், பெண் காவலர்கள் ஆகியோர் நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்டபார்வை என்று பாரதி கூறிய புதுமைப் பெண்களாக மிடுக்கு நடை போட்டு வந்தனர்.

ஊர்வலத்தின் நடுவே, மகளிர் கரக ஆட்டக்கலைஞர்கள், காவடி ஆட்டம், கரக ஆட்டங்களை ஆடினர். பாரதியாரின் வீரம் செறிந்த பாடல்களை ஒலிபரப்பிக் கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து வருமானவரி மகளிர் பிரிவினர் - அஞ்சல் அலுவலக மகளிர் பிரிவினர் அணி அணியாக வந்தனர்.

சென்னைப் பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் லலிதா காமேசுவரன் மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர்சரசுவதி ஆகியோர் தலைமையில் நூற்றுக் கணக்கான டாக்டர்கள் அணிவகுத்து வந்தனர்.

மகளிர் பேரணியினர் பல வண்ண உடை அணிந்து வண்ணத்துப் பூச்சி போன்று காட்சி அளித்தனர். மகளிர் பேரணியினர் கட்டுக் குலையாமல் கடமையே கண்ணாகப் பேரணியில் வந்தது காண ஆயிரம் கண்கள் வேண்டும் என்பதுபோல் இருந்தது.

பேரணியைப் பார்ப்பதற்காக சென்னை ஆயிரம் விளக்கு மசூதி அருகே, மிக பிரம்மாண்டமான அலங்கார மேடை அமைக்கப்பட்டிருந்தது. அந்த மேடையிலிருந்து மேதகு ஆளுநர் திரு எஸ். எல். குரானா அவர்கள், மேதகு பீகார் ஆளுநர் கித்வாய் அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் சட்ட மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் டாக்டர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள், திரு இராம. வீரப்பன் அவர்கள், திரு அரங்கநாயகம் அவர்கள், திரு எஸ். இராகவானந்தம் அவர்கள், டாக்டர் எச்.வி. ஹண்டே அவர்கள், திரு எஸ்.என்.ராஜேந்திரன் அவர்கள். சட்டப் பேரவை மேலவை உறுப்பினர்கள் பார்த்து மகிழ்ந்தனர்.

அரசு அச்சகம், நர்சுகள், மருத்துவத்துறை அலுவலர்கள், தொழில்துறை, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், சென்னைப் பெருநகர் நீர்வழங்குதுறை, திட்டக்குழு, இந்து சமய அறநிலைய வாரியம், வருவாய்த்துறை, உப்புக்கழகம், குடிசை மாற்று வாரியம், விளையாட்டுக்குழு, தமிழ்நாடு அக்ரோ தொழிற்கழகம், தமிழ்நாடு கைத்தறி முன்னேற்றக்கழகம், கருவூலம் மற்றும் கணக்குகள் அலுவலகம், தமிழ்நாடு கனிமவளம், டிட்கோ, பெண் காவலர் போன்ற பல்வேறுபட்ட மகளிர் பிரிவைச் சேர்ந்தவர்களும், ஊர்காவல் பிரிவினரும் அணிவகுத்து வந்தனர்.

மேதகு ஆளுநர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் ஆகியோர் அமர்ந்திருந்த மேடையினைக் கடந்தபோது ஊர்வலத்தினர் கரம்கூப்பி வணங்கினர் - பதிலுக்கு மேடையில் இருந்தவர்களும் வணங்கினார்கள்.

இதுபோன்ற வரலாற்றுச் சிறப்புமிக்க 'மகளிர் பேரணி' ஓர் இடத்தைக் கடக்க $1\frac{1}{2}$ மணி நேரம் பிடித்தது. புதிய வரலாற்றைப் படைத்த இந்த மகளிர் பேரணி தேசிய ஒருமைப்பாட்டை உணர்த்துவதாக இருந்தது என்றால் அது மிகையாகாது.

**நிகழ்ச்சித் தொகுப்பு :**

**ஜி. அனங்கன்**

**முன்பக்க அட்டையில் :**

**மதுரை காமராசர் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா**

**பின்பக்க அட்டையில் :**

**பாரதி விழாவில் மகளிர் பேரணி**



# செந்தமிழ்க் கவிஞனுக்கு தாய்க்குலத்தின் பாராட்டுகள்

பாரதி இந்திய நாட்டின் தவப்புதல்வர்களில் ஒருவர். அவர் என்றென்றும் நினைக்கப்பட வேண்டியவர்.

திருமதி ஷீலா கௌல்.
—மாண்புமிகு மத்திய கல்வி அமைச்சர்

பாரதி பெண் விடுதலைபற்றி எடுத்துக் காட்டியிருக்கிறார்.

திருமதி கோமதி சீனிவாசன்
மாண்புமிகு சமுக நலத்துறை அமைச்சர்.

தமிழ்க் கவிதையில் புதிய சகாப்தம் கண்டவர் பாரதி.

—திருமதி சுலோசனா சம்பத்
குடிசை மாற்று வாரியத் தலைவர்

பெண் விடுதலை வேண்டும் என்று ஒவ்வொரு கவிதையிலும் சொன்னவர்.

—திருமதி ஜெயா அருணாசலம்
உழைக்கும் மகளிர் சங்கத்தலைவர்

பெண் இனத்திற்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, ஆக்கத்தையும் ஊக்கத்தையும் ஊட்டியவன் பாரதி.

—டாக்டர் லலிதா காமேசுவரன்
சென்னை மருத்துவக் கல்லூரி முதல்வர்

ஸ்திரீகளுக்கு இன்னும் இருந்து வரும் கஷ்டங்களை நீக்க முயற்சி செய்வது பாரதிக்குச் செய்யும் அஞ்சலியாகும்.

—திருமதி ருக்மணி அருண்டேல்
கலாட் சேத்திரா தலைவர்

மிகச் சிறந்த கவிஞர் பாரதியை நினைவு படுத்திக் கொள்ளவேண்டும்.

—திருமதி மேஜார்ஜ்
தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்
தலைமைப் பொறியாளர்

புரட்சிக்காரராகத் திகழ்ந்த பெருங்கவிஞன் பாரதியின் தொண்டு, தியாகத் தொண்டாகும்.

—திருமதி தாரா செரியன்
தமிழ்நாடு சமுக நல வாரியத் தலைவர்

பாரதி ஒரு சமுத்திரம். அதில் மூழ்கி அவரது குண முத்துக்களை ஏராளமாய் எடுத்துச் செல்லலாம்.

—திருமதி சிவசங்கரி
எழுத்தாளர்

திட்டக்குழு 6 ஆண்டுகளுக்குப் போடும் திட்டங்கள்போல் 60 ஆண்டுகளுக்குத் திட்டம் போடுவதற்குரிய விஷயங்கள் பாரதியின் பாடலில் உள்ளன.

—திருமதி டி. என். அனந்தநாயகி
வழக்கறிஞர்



விடுதலை ஆவேசத்தை நாடுமுழுதும் மூட்டி விட்ட முதற்கவி பாரதி.

—திருமதி இராதா தியாகராஜன்
தியாகராசர் ஆலைத் தலைவர்

பாரதி, பெண்களுக்காக வீர முழக்கமிட்ட தால்தான் இன்று பெண்கள் கல்லூரியில், நாடாளுமன்றத்தில் – மற்றும் பல துறைகளில் பங்கு பெறும் பெருமை கிடைத்துள்ளது.

—திருமதி மரகதம் சந்திரசேகர், எம்.பி.

பாரதியின் கற்பனா சக்திக்கு எட்டாதது எதுவுமே இல்லை.

—திருமதி சரோஜினி வரதப்பன்
இந்தியப் பெண்கள் சங்கத் தலைவர்

தொகுப்பு: தமிழ்ப்பித்தன்

தந்தை பெரியார் சொல்லிய சீர்திருத்தக் கருத்துக்களை, பாரதியார் வேறு முகாமிலிருந்து கூறினார்.

—திருமதி சத்தியவாணிமுத்து, எம்.பி.

பாரதியின் கவிதை நமக்குச் சிந்தனை யைத் தூண்டும்; ஆவேசத்தைத் தூண்டும்; சமுதாய மாற்றத்திற்கு வழி வகுக்கும்.

—செல்வி ஜெயலலிதா
சத்துணவுத் திட்ட உயர்மட்டக் குழு உறுப்பினர்

[16.12.'82-ல் வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற பாரதி நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரை களிலிருந்து.]

1.2.1983
தமிழரசு
திருநெல்வேலி மாவட்டச்
சிறப்பிதழாக
வெளிவருகிறது!





# தன்னை விளக்கும் கண் மருத்துவ நூல்

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் பதிப்பித்துள்ள 'கண் மருத்துவம்' என்னும் நூல் வெளியீட்டு விழா, 7.12.82ல் சென்னை தேவநேயப் பாவாணர் மாவட்ட மைய நூலகக் கூட்ட அறையில் மாண்புமிகு சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் டாக்டர் ம.பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு.செ.அரங்கநாயகம் அவர்கள் நூலை வெளியிட்டு, நூலாசிரியர் திரு. வே.இரா. மாதவனுக்குப் பொன்னாடை போர்த்தி, உரை நிகழ்த்தினார்.

அமைச்சர் தம் உரையில் குறிப்பிட்டதாவது:

''தமிழக அரசு, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் ஓலைச் சுவடிகள்ளப் பதிப்பிக்க ஏற்பாடு செய்ததின் காரணமாக, இதுகாறும் பத்துக்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகளிலிருந்து நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எத்தனை ஆயிரம் சுவடிகள் கிடைத்தாலும் அவற்றைப் பதிப்பிக்கும் ஆசை தமிழக அரசுக்கு இருக்கிறது. சுவடிகளைப் படித்துப் படியெடுத்துப் பதிப்பிக்கப் பயிற்சி கொடுக்கிறோம் - பயிற்சியாளர்களுக்கு உதவித் தொகையும் கொடுக்கிறோம் என்றபோது ஐந்தாறு பேர்கள்தாம் வந்தார்கள். அவர்களில். ஒருவர் இந்த நூலைப் பதிப்பித்திருக்கிறார்; இது நமது முயற்சிக்குக் கிடைத்துள்ள வெற்றி. இந்த முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும் சித்த மருத்துவர்கள் இதனைப் படித்துப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும்.

''மருத்துவர்களுக்குத் துணை செய்யக்கூடிய வழிகாட்டியாக இந்நூல் அமையும். கிராமங்களிலுள்ள ஏழை மக்களுக்கும், கண்களைப் பாதுகாத்துக்கொள்ளற்குரிய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நூல் துணைபுரியும்''.

நூலின் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட கல்வித்துறை ஆணையர் மற்றும் செயலர் திரு செ. இராமதாஸ், இ.ஆ.ப. தமிழக அரசு மருத்துவப் பல்கலைக்கழகம் அமைக்க முயன்று வருகிறது என்றும் இந்நிலையில் இந்த நூல் வெளிவந்துள்ளது பாராட்டத்தக்கது என்றும் குறிப்பிட்டார்.

விழாத் தலைவர் மாண்புமிகு மேலவைத்தலைவர் டாக்டர் திரு ம.பொ.சிவஞானம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழர் வாழ்விலே எங்கும் எதிலும் தமிழே முதலிடம் பெற வேண்டும் என்பதிலே காரிய சாத்தியமான நிகழ்ச்சி இன்று நடைபெறுகிறது.

''இந்த நூலைப் பார்க்கும் போது, தமிழே மருத்துவத்துறை போதனா மொழியாக வர முடியும் என்ற நம்பிக்கை உறுதியாகிறது.

''தமிழோடு இயைந்த மருத்துவ முறையை விளக்க இந்த நூல் பெரிதும் பயன்ட்டும்''.

''கண் மருத்துவத்துறையில் சித்த மருத்துவத்தை நல்ல முறையில் ஆராய்ந்து பயன்படுத்த இந்த நூல் உதவும்.

''நான் மாஸ்கோ போயிருந்த போது, அங்குள்ள ரஷ்ய டாக்டர், நோய் விளக்கத்தையும், மருந்துகளையும் ரஷ்ய மொழியிலேயே எழுதிக் கொடுத்தார்.

''நான் பாரிசுக்குப் போயிருந்த போது, அங்குள்ள டாக்டர் பிரான்சு மொழியிலேயே எழுதிக் கொடுத்தார்.

''இங்குள்ள மருத்துவர்களோ இன்னும் ஆங்கிலத்தில்தான் எழுதுகிறார்கள்.

''இதனை நான் கூறும்போது, இதனை மொழிப் பிரச்சனையாக யாரும் எடுத்துக் கொள்ளக் கூடாது. மொழிப் பிரச்சனை வேறு - கல்விப் பிரச்சனை வேறு. தெரியாத மருத்துவ முறையைத் தெரிந்து கொள்ள, தெரிந்த மொழியில் சொல்லிக் கொடுத்தால்தானே புரியும்? எனவே இது கல்விப் பிரச்சனையே தவிர மொழிப்பிரச்சனையல்ல. இரண்டையும் ஒன்றாக்கிக் குழப்பக் கூடாது.

''தமிழிலே எல்லாம் நடக்கும் என்பதற்கு இந்தக் 'கண் மருத்துவம்' நூல் ஒரு சான்று. இதனைப் பதிப்பிப்பதில் ஏட்டின் ஒவ்வொரு பக்கத்தோடும், ஒவ்வொரு வரியோடும் ஒவ்வோர் எழுத்தோடும் போராடிப் பணி புரிந்துள்ளவர்களைப் பாராட்டுகிறேன்-வாழ்த்துகிறேன்.''

விழாத் தொடக்கத்தில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் திரு டாக்டர் ச.வே.சுப்பிரமணியம் அனைவரையும் வரவேற்று, நிறுவனத்தின் பணிகளை விளக்கினார்.

சென்னை பேரறிஞர் அண்ணா மருத்துவ மனையில் மருத்துவராகப் பணிபுரியும் டாக்டர் ஜி. கீதா, கண் மருத்துவம் என்ற நூலை அறிமுகப்படுத்தினார்.

திருவாளர்கள் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், டாக்டர் இரா. கு. நாகு, டாக்டர் க.ப. அறவாணன், டாக்டர் இராம. குருநாதன், டாக்டர் இ. சுந்தரமூர்த்தி ஆகியோர் நிறுவன நூல்களை மதிப்பீடு செய்தார்கள்.

நூலாசிரியர் திரு வே. இரா. மாதவன் இறுதியாக, அனைவருக்கும் நன்றி கூறினார்.

—சாமி பழனியப்பன்

## பத்திரிகையில் வந்த பயனுள்ள செய்திகள்!

அன்றாடப் பத்திரிகையை அலசிப் பார்த்த போது பல அரிய செய்திகள் கிடைத்தன. அவை தான் இவை:

### நீளமான மலைக்குகை இரயில் பாதை

நாட்டிலேயே மிகவும் நீளமான 'குகை ரயில்பாதை' மத்திய ரயில்வேயின் பம்பாய் - புனே பிரிவில் அமைக்கப்பட்டுள்ளது.

மங்கிஹில், கண்டாலா என்னும் ரயில் நிலையங்களுக்கிடையே 2 கிலோ மீட்டர் தூரத்துக்கு மேல் மலையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ள இந்த ரயில்பாதை 1982 ஜூலையில் திறந்து வைக்கப்பட்டது. 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 3 ஆண்டுக் காலத்திற்குள் இந்த ரயில்பாதை போடப்பட்டுள்ளது.

### டெலிவிஷனைக் கண்டுபிடித்தவர்

'டெலிவிஷனின் தந்தை' என்று அமெரிக்காவில் பிரபலமாக விளங்கியவர் ரஷிய விஞ்ஞானி விளாபடிமீர்ஸோரிகின். ஸோரிகின் ஒரு மின்சாரப் பொறியாளர். டெலிவிஷனில் புகைப்பட டியூபை முதன் முதலில் கண்டுபிடித்த இவர், அண்மையில் காலமானார்.

### உடலைச் சோதனை செய்யும் கருவிகள்

ஈரல், சிறுநீரகம் போன்ற உறுப்புக்களைக் கூட நுட்பமான முறையில் சோதனை செய்யும் நவீனமான 'அல்ட்ரா சவுண்ட் ஸ்கானர்' கருவி சென்னை இராயப்பேட்டை அரசினர் மருத்துவமனையில் உள்ளது. இதுபோன்ற நவீன கருவி சென்னை நகரில் முதன் முதலாக இங்குதான் வைக்கப்படுகின்றது.

இக்கருவியுடன் இணைக்கப்பட்டுள்ள மற்றொரு சாதனம் அறுவைச் சிகிச்சை எதுவும் செய்யாமலேயே உடலில் சில பகுதிகளில் உருவாகும் சீழ் மற்றும் தேவையில்லாத திரவம் ஆகியவற்றை வெளியேற்றும் திறன் கொண்டதாகும்.

### வயது 136 ஆகியும்

சீனாவில் 136 வயதான முதியவர் ஒருவர் இப்போதுங்கூட விறகு வெட்ட அவ்வப்போது மலைகளுக்குச் செல்கிறாராம்.

லான் பூபிங் எனப்படும் அவர், சீனாவின் தெற்குப் பகுதியில் வசிக்கிறார். 1846ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13 ஆம் தேதி அவர் பிறந்தார்.

அவரது தலை முடிகள் விழுந்து வழுக்கையாக உள்ளபோதும், அவருக்கு நல்ல மனதிடம், உள்ளது. சமையல் போன்ற வேலைகளையும் அவர் செய்கின்றார்.

### கற்றவர் எத்தனை பேர்?

இந்தியாவிலேயே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை கேரளத்தில் அதிகமாக உள்ளதாகத் தெரிய வந்துள்ளது. கேரளத்தில் படித்தவர்கள் 69.17 சதவிகிதம் பேர்.

மகாராஷ்டிரமும், தமிழ்நாடும் முறையே, இரண்டாவது மூன்றாவது இடத்தைப் பெறுகின்றன. மகாராஷ்டிரத்தில் 47.37 சதவிகிதம் பேரும், தமிழ்நாட்டில் 45.78 சதவிகிதம் பேரும் படித்தவர்கள் ஆவர். கர்நாடகம் 11-வது இடத்தைப் பெறுகிறது. கர்நாடகத்தில் படித்தவர்கள் 38.41 சதவிகிதம் பேர் உள்ளனர்.

### நிலக்கடலையிலிருந்து பிஸ்கட்

நிலக்கடலையிலிருந்து புரதச் சத்து மிகுந்த பிஸ்கட்டுகளையும், மிட்டாய்களையும் தயாரிக்கும் முறையை மைசூரிலுள்ள மத்திய உணவுப் பொருட்கள் ஆராய்ச்சிக் கழகத்தினர் உருவாக்கியுள்ளனர்.

### இந்தியர் தொகுத்த ஆங்கில அகராதி

இந்தியர் ஒருவர் புதிய ஆங்கில அகராதி ஒன்றைத் தொகுத்துள்ளார். அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள டைம்ஸ் புத்தக நிறுவனம் இதை வெளியிட்டுள்ளது.

அவரது பெயர் தாமஸ் எம். பாய்கடே. இவர் முன்பு டில்லி ஸ்டேட்ஸ்மென் பத்திரிகையில் பணி புரிந்தவர். தற்போது அவர் கனடாவில் உள்ளார். 'நியூயார்க் டைம்ஸ் தினசரி அகராதி' என்று அதற்குப் பெயர்



## அறிவியல் பாடம் கற்போம்!

விண்வெளிக் கூடம் தன்னில்
விரிந்துள விண்மீன் கூட்டம்,
கண்களைக் கூசச் செய்யும்
கதிரவன் கதிரின் வெப்பம்,
தண்ணொளி நிலவின் சுற்றுத்
தளப்பரப் பளவு, யாவும்
நன்முறை யினிலே காண
நல "அறி வியலைக் கற்போம்!"

கடலிலே விதையை நட்டுக்
கணக்குடன் உரமும் இட்டுப்
படையுடன் சென்று நல்ல
பயன் அறுத் திடுவ தற்கும்
முடிந்திடும்; எனநி னைத்தால்
முழுப்பயன் பெறலாம்; அது
அடைந்திட வேண்டும் என்றால்
"அறிவியல் பாடம் கற்போம்!"

சித்தர்கள் சொல்லிச் சென்ற
சிறப்புவைத் தியங்க ளோடு,
புத்தியைச் செலவு செய்து,
போனதோர் உயிரைக் கூட
இத்தரை கொண்டு வந்து
இன்பமாய் வாழ்வ தற்கு,
வித்தெனும் மருத்து வத்து
வியன் "அறி வியலைக் கற்போம்"!

**வீர. இராசேந்திரன்,**
மேனிலை 2-ஆம் ஆண்டு,
அறிவியல் பிரிவு,
தூயமரியம்மை மேல்நிலைப் பள்ளி,
திண்டுக்கல்.



# அமெரிக்காவில் அயல் மாணவர்கள்

அமெரிக்கக் கல்லூரிகளிலும், பல் கலைக்கழகங்களிலும்படிக்கும் அயல் நாட்டு மாணவர்கள் தொகை 1982-ல் கூடுதலாயிற்று. இப்படிக் கூடுவது இது 8-வது ஆண்டாகும். ஆசிய மாணவர்கள் தொகையே பெரிதும் கூடியது.

அயல் நாட்டு மாணவர்கள் தொகை 3,26,299. இது மொத்த மாணவர்கள் தொகையில் 2.6 சத வீதம். அவர்கள் படித்த கல்வி நிலையங்களின் எண்ணிக்கை 2,454.

கலிஃபோர்னியா மாநிலக் கல்வி நிலையங்களிலேயேமிகக் கூடுதலாக அயல் மாணவர்கள் படித்தார்கள். அவர்கள் 51,520 பேர். அடுத்து நியூ யார்க் மாநிலம்: 28,222 பேர். டெக்ஸாஸ்: 24,397; ஃபிளோரிடா: 17,011; மாஸச்சூஸட்ஸ்: 15,446.

புகழ் பெற்ற கல்விநிலையங்களிலேயே பெரும்பாலோர் படித்தனர்.

ஈரான் தான் தொடர்ந்து மிகப் பெரும் தொகையில் மாணவர்களை யு.எஸ். அனுப்பி வருகிறது. ஜப்பானுக்கு 25-வது இடம். இந்தியாவுக்கு 7-வது.

ஐரோப்பிய மாணவர்கள் தொகை சற்றே கூடியது. அதாவது மொத்தம் படிக்கும் அயல் மாணவர்களில் இது 9 சத வீதத்துக்குச் சற்றுக் குறைவு. 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்ததைவிட மிகவும் குறைவு.



# கேள்வியும் பதிலும்

1. விமானம் மேலே ஏறுவதற்கும், இறங்குவதற்கும் உதவும் சாதனம் எது?
2. முதன் முதலில் ஹெலிகாப்டர் விமானத்தை விண்ணில் பறக்க விட்டவர் யார்?
3. ஜகனாஸ்கோப்பினுள் உள்ள தட்டானது எதனால் ஆனது?
4. எலெக்ட்ரான் எக்ஸ் கதிர் சாதனத்தை கண்டு பிடித்தவர் யார்?
5. உலகத்தின் மிகப் பெரிய கோபுரம் எது?
6. ஊதா மேல் ஒளியைக் கண்டறிந்தவர் யார்?
7. காமாக் கதிர்களின் இயல்பைக் கண்டு பிடித்தவர் யார்?
8. எலெக்ட்ரான் போன்ற துகள்கள் அலைகள் போலச் செயல் படுகிறது எனக் கூறியவர் யார்?
9. Canal rays எனப்படும் புழைக் கதிர்களை கண்டு பிடித்தவர் யார்?
10. ரேடாரை முதன் முதலில் வெற்றிகரமாக இயக்கியவர் யார்?

விடைகள்

1. எலிவேட்டர்
2. பிரிகேட் என்ற விஞ்ஞானி
3. மைக்கா அல்லது அபிரகம்
4. டாக்டர் ரஸ்ஸெல் எச். மார்க்கன்
5. டோக்கியோ கோபுரம்
6. ஜான் வில்ஹெம் ரிட்டர்
7. ஹென்றி பேக்குரல்
8. பிரைம் லாயி டிப்ராக்ஸி
9. கோல்ட் ஸ்டீன்
10. எட்வர்ட் ஆப்பிள்டன்

# தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் ஆக்கப் பணிகள்!

- ஆழ்கடல் மீன் பிடிப்பு
- அண்மைக்கடல் மீன் பிடிப்பு
- நீர்த்தேக்கங்களில் மீன் வளர்ச்சியும், பிடிப்பும்
- தரமான மீன்குஞ்சுகள் உற்பத்தி
- உள்நாட்டு மற்றும் கடல்மீன் விற்பனை
- பனிக்கட்டி உற்பத்தி
- உறைய வைத்தல் மற்றும் குளிர்பதன வசதிகள்
- மீன்தூள் உற்பத்தியும் விற்பனையும்
- மீனவர்களுக்குத் தேவையான டீசல் விற்பனை.

**தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்**
15, அசோக் நகர் மெயின் ரோடு,
சென்னை 600 024




DIPR-2545-82/AW

ADWAVE/TNFDC/2199

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.


எழிலான வண்ணங்கள்
இனிதான எண்ணங்கள்!
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
கண்ணைக் கவரும் கைத்தறித் துணிகள்
வண்ண வண்ண பட்டுச் சேலைகள் ஆடவர்
மகளிர் அனைவரும் விரும்பும் அருமை
புதுமை இழையும் ஆடைகள் ஆயிரம்
வகைகள்...அழகார்ந்த ரகங்கள்
அனைத்தும் உண்டு!
Sir

எண். M. 8676 Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

1-1-1983



